Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2022-2024 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month


## அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டங்கள்

நாகர்கோவிலில்

அக்டோபர் 4
(செவ்வாய் கிழமை
அரசு விடுமுறை)

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

விஜயதா திருமண மண்டபம்
WCC ரோடு,
நாகர்கோவில்

தொடர்புக்கு
(0431) 2765386, 8220317472



தேவ செய்தி
Dr.ஆனந்த ஸ்திரா
Mrs.மார்கிரேட் ஸ்திரா

திருநெல்வேலியில்

அக்டோபர் 5
(புதன் கிழமை
அரசு விடுமுறை)

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

செல்வி மஹால்,
காளிமார்க் பஸ் ஸ்டாப் அருகில்,
முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை.

தொடர்புக்கு
(0431) 2765386, 8148237037

## சென்னையில் உங்கள் விடுதலையின் நாள்



அக்டோபர் 24
திங்கள்கிழமை
(அரசு விடுமுறை)

இடம்: J.J. மஹால்
L.K.S. தங்கமாளிகைக்கு எதிரில்,
G.S.T. மெயின்ரோடு,
கடப்பேரி, மேற்கு தாம்பரம்
சென்னை.

நேரம் : காலை 9.30 மணி முதல்
மதியம் 1.00 மணி வரை

செய்தி & ஜெபம்
Rev.Dr.A. ஜாஷ்வா


தொடர்புக்கு
94888 45627 80987 42638


Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்

## ANBARIN OOZHIYAM

மலர்:8 இதழ்:10 அக்டோபர் 2022 தனிபிரதி- ரூ.20/- ஆண்டு சந்தா- ரூ.200/-
VOL: 8 ISSUE NO : 10 October 2022 Single Copy - Rs 20/- ANNUAL SUBSCRIPTION: RS 200/-



## ஊழியத்தின் ஆரம்ப கால பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள் ஏராளம்!

**கர்த்தரை நம்புங்கள், அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்தி பெறுவீர்கள்.**
**– 2 நாளா. 20:20**





என் பெயர் ரூபல்லா, என் கணவர் பெயர் திரு. ஜான்சன். அவர் சட்டக் கல்லூரியில் வேலை பார்த்து வந்தார். அந்த நாட்களில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது.

### ஊழியத்தின் ஆரம்ப கால பணிகள்

**சகோதரர் ஆனந்த ஸ்திரா** அவர்கள் தன் பணியை முடித்து வீடு திரும்பியவுடன் இரவு நேரங்களில் கிராமப்புறங்களுக்கு குழுவாக சென்று நோயாளிகளை சந்தித்து ஜெபிப்பார். பிசாசின் போராட்டத்தினால் கஷ்டப்படுகிறவர்கள், தற்கொலைக்கு முயற்சி செய்கிறவர்கள், கர்த்தரை விட்டு பின் வாங்கின மக்கள், இளங்கரித்து போனவர்களையெல்லாம் நேரில் சந்தித்து, அவர்களுக்கு இயேசுவின் அன்பைப் பற்றிச் சொல்லி, கண்ணீரோடு ஜெபிப்பார். பாதிக்கப்பட்ட அந்த மக்கள் அனைவரும் இயேசுவின் நாமத்தில் விடுதலையாவதை கண்டு, நானும் என் கணவரும், அன்பரின் ஊழியத்தை தாங்க ஆரம்பித்தோம்.

### சகோதரி வாழ்வில் கர்த்தர் செய்த நன்மைகள்

அந்த நாட்களில் நான் வேலை இல்லாமல் இருந்தேன். அப்பொழுது சகோதரன் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார். கர்த்தர் எனக்கு இரங்கி, வெஸ்ட்ரி மேல்நிலைப் பள்ளியில் வேலை கிடைக்கும்படி உதவி செய்தார். எனது கண்களில் பார்வை மிகவும் குறைவாக இருந்தது. தேவ கிருபையால் என் பார்வை குறைபாடு நீங்கி, தெளிவான கண் பார்வை உண்டானது.

மூத்த மகளுடைய திருமணம் நீண்ட நாள்களாக தடைபட்டுக் கொண்டே இருந்தது. அந்த தடையையும் கர்த்தர் நீக்கினார். நல்ல மணமகன் கிடைத்து, மகளுடைய திருமணம் ஆசீர்வாதமாய் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். அத்துடன் **மூத்த மகளுக்கு அரசாங்க வேலை கிடைத்தது. என் மகளையும், மருமகனையும் கர்த்தர் தூய ஆவியால் நிரப்பி அவர்கள் இருவரையும் ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.**

மூத்த மகனுக்கும் நல்ல ஒரு அரசாங்க வேலை கிடைத்தது. **அந்த அரசாங்க வேலையில் தேவன் தாமே மகனுக்கு உயர்வை அருளினார். மகனுடைய திருமணமும் ஆசீர்வாதமாக நடந்தது.**

என் இளைய மகன் ஜெரால்டு பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே சீருடையுடன் சகோதரனிடம் அழைத்து வந்து ஜெபிப்போம். **மகன் இன்ஜினியரிங் முடித்தவுடன் Multinational Company-ல் வேலைக்கு சேரும்படி கர்த்தர் உதவி செய்தார்.** கர்த்தருக்கு பயந்த பெண் கிடைத்து மகனுடைய திருமணமும் ஆசீர்வாதமாக நடந்தது. இப்படியாக வருடங்கள் பல ஓடின. கர்த்தர் தாமே எங்கள் குடும்பத்தை நேர்த்தியாக நடத்தி வந்தார்.

குறிப்பாக என் கணவர் இறந்து நான் துக்கத்தில் இருந்த பொழுதெல்லாம், சகோதரர் அவர்கள் என்னை மிகவும் ஆறுதல்படுத்தி விசுவாசத்தில் வளரச்செய்தார். **இன்று நானும், என் வீட்டாரும் இயேசுவிற்கு பலத்த சாட்சியாக இருக்கிறோம்.** இதற்கு ஒரே ஒரு காரணம் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களது கண்ணீர் நிறைந்த ஜெபம்தான்.

**மார்த்தாள், மரியாள், லாசரு இயேவுக்கு ஊழியம் செய்தது போல நாங்களும் அன்பரின் ஊழியத்தை நேசித்து எங்களால் இயன்ற அளவு தாங்குகிறோம். அத்துடன் S.J.Saves Trust-ல் உள்ள ஆதரவற்ற ஏழை பிள்ளைகளுக்கும் உதவி செய்கிறோம். மேலும், சகோதரி. மார்கிரேட் ஸ்திரா, Dr. ஜேன் ஜாஷ்வா, Rev.Dr.A. ஜாஷ்வா மற்றும் பேரன் ஜோனத்தனுக்காகவும்** மறவாமல் ஜெபிக்கிறோம்.

எனக்கு இப்பொழுதுவயது 84. இருப்பினும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நானும், என் பிள்ளைகளும், என் மருமக்களும் ஊழியத்தைத் தொடர்ந்து தாங்கி வருகின்றோம். இதனால் கர்த்தர் தாமே ஒரு குறையும் இன்றி எங்களை அற்புதமாக நடத்தி வருகிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நீங்களும் இதே போல உற்சாகமாக ஊழியத்தைத் தாங்குங்கள். கர்த்தர் தாமே எங்களை ஆசீர்வதித்தது போல நிச்சயம் உங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்து உன்னத நிலைக்கு உயர்த்துவார். கர்த்தருக்கே மகிமை!

**- திருமதி. ரூபல்லா, திருச்சி**












# அன்பரின் ஊழியம்

மலர்: 8 ◆ அக்டோபர் 2022 ◆ இதழ் 10

## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவபிள்ளைகளே! கடந்த மாதம் முழுவதும் நம்மை அன்போடு பாதுகாத்து வந்த கர்த்தரை மனதார ஸ்தோத்தரிப்போம். இந்த புதிய மாதத்திலும் தேவகிருபை, தேவ பாதுகாப்பு உங்கள் எல்லைகளில் பெருகும்படி ஜெபிக்கிறேன்.

**அன்பரின் ஊழிய பத்திரிக்கையை தவறாமல் வாசித்து பயனடைந்து வருகிற அன்பு பங்காளர் களுக்காகவும், அன்பு வாசகர்கள் அனைவருக்காகவும் தேவனை துதிக் கிறேன். தொடர்ந்து பத்திரிக்கையை பெற வருட சந்தா வை தவறாமல் செலுத்தி புதுப்பித்து கொள்ளுங்கள்.**

> **தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும், வறண்டநிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்**
> **– ஏசாயா 44:3**

உங்கள் குடும்ப சூழல் நிமித்தம் ஒரு வேளை நீங்கள் சோர்ந்து போய் இருந்தால் தாக முள்ளவனுக்கு தண்ணீரையும், வறண்ட நிலத்திற்கு ஆறுகளையும் ஊற்ற வல்லவரான நம் சர்வ வல்ல தேவனை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இக்கட்டான சூழ்நிலைகள் மாறும். ஆசீர்வாத ஊற்று பெருக்கெடுத்து ஓடும். சந்ததிகளை மறவாத தேவன் உங்கள் சந்ததியின் மேல் தம் ஆவியை ஊற்றி பெலப் படுத்துவார்.

நாம் அனைவரும் அறிந்தபடி உலகமானது மிகவும் சீர்கெட்டு பல பாவங்களில் சிக்குண்டு, மிகவும் கொடூரமான செயல்களில் ஈடுபட்டு வருவதை காண்கிறோம். ஐரோப்பா, ஆப்பிரிக்கா, சீனா, ஜெர்மன், நெதர்லாந்து, ஆம்ஸ்டர்டாங்க் மற்றும் ரஷ்யா போன்ற எல்லா நாடுகளிலும் கடவுள் இல்லை என்னும் கொள்கையானது பரவி வருவதை பார்க்கிறோம். மனிதன் சிருஷ்டிகரை அறியாமலும் நினையாமலும் அவருக்கு விரோதமான காரியங்களை செய்கிறான். தன்னுடைய முயற்சியால் எல்லாம் ஆகும், தானே கடவுள் எனக்கு யாரும் தேவையில்லை என்று மனிதன் நினைக்க ஆரம்பித்து விட்டான். USA, EUROPE ஆகிய கண்டங்களில் 65 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் நாஸ்திகர்களாக

ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |

அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605 (24 மணி நேரமும்)**

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

மாறிவிட்டனர். பிறரை பாதிக்காமல் எந்த பாவத்தையும் நாம் செய்யலாம் என்கிற துணிகரம் மனிதருக்குள் நுழைந்துவிட்டது.

உலகம் லோத்து, நோவாவின் காலத்திற்கு மாறிவிட்டது. இதுவுமல்லாமல் மிகப்பெரிய யுத்தத்திற்கு உலகம் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதின் ஆரம்ப கட்டத்தை நாம் பார்க்கிறோம். நம்மை சூழ யுத்தத்தின் சத்தம் கேட்டுக் கொண்டே இருப்பதை நாம் அறிவோம். மெய்யாகவே எசேக்கியேல், தானியேல், ஏசாயா என்னும் பல பெரிய தீர்க்கதரிசிகள் கூறின கடைசி கால தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி வருகிறதை நாம் காணமுடிகிறது.

அநேக நாடுகளில் பொருளாதார சீர்குலைவு ஏற்பட்டு லட்சக்கணக்கான மக்கள் பசி, பட்டினியால் கஷ்டப்படுகிறார்கள். எனவே நாம் நிர்விசாரமாக இல்லாமல் அப்படிப்பட்ட பாடுபடுகிற மக்களுக்கு உதவி செய்வோம். **கர்த்தருடைய வருகை மகா சமீபம் என்று எண்ணி நம்மை நாமே ஜெபத்திலும், வேண்டுதலிலும், உறுதியாய் தரித்திருப்போம்.**

எங்கு பார்த்தாலும் கொலை கொள்ளைகள், பிறர் பொருளை அபகரிப்பது போன்ற அநியாயங்கள் பெருகிக் கொண்டே இருக்கிறது. உங்கள் உள்ளம் கலங்காமல் இருப்பதாக. தேவனிடம் விசுவாச மாயிருங்கள், அவர் உங்களை எல்லா தீமைக்கும் விலக்கி நடத்துவார். நீங்கள் மரண இருளின் பாதையில் நடந்தாலும் கூட இயேசு உங்களோடு வருவார். மரணத்தை ஜெயித்து உங்களுக்கு புது வாழ்வையும், ஜீவனையும் கொடுப்பார்.

கடந்த மாதத்தில் தேனி, திருநெல்வேலி, விஜயவாடா மற்றும் திருச்சியில் நடந்த கூட்டங்கள் அனைத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். அநேக மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. தொடர்ந்து நாம் ஆத்தும ஆதாயம் என்னும் அறுவடையை செய்து பரலோகத்தை நிரப்புவோம்.

1. **அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் என்று கர்த்தர் சொன்னார். எனவே எஜமான் தன் அறுப்புக்கு உண்மையான உதவி யாட்களை அனுப்பும்படி ஜெபியுங்கள்.**
2. **கடந்த மாதம் பெங்களூர், ஆந்திரா, தெலுங் கானா மற்றும் பல பகுதிகளில் பயங்கரமான வெள்ளம் வந்து ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து கஷ்டப்படுகின்றனர். அவர்களுக்காக ஜெபியுங்கள்.**
3. **விசேஷமாக எங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத் திலுள்ள ஒவ்வொருவரின் சுகத்திற்காக, தீர்க்காயுசுக்காக ஜெபியுங்கள்.**
4. **நமது தொலைக்காட்சி ஊழியங்களுக்காக, அலுவலகத்திற்கு நல்ல பணியாட்கள் கிடைக்க ஜெபியுங்கள்.**
5. **நமது ஜெப ஸ்தலத்தின் உள்பகுதி வேலை முடிந்து விட்டது. வெளிப்பகுதியில் பெயிண்டிங் அடிக்காமல் இருக்கிறோம். அதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.**
6. **நம்மை நடத்துகிற தேவ பிள்ளைகளுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்.**
7. **நாட்டின் தலைவர்களுக்காகவும், அரசு ஊழியர் களுக்காகவும், விவசாய தொழில் செய்கிறவர் களுக்காகவும், படிக்கின்ற பிள்ளைகளுக்காக வும் ஜெபியுங்கள். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

கர்த்தர் தமது செட்டைகளின் மறைவில் வைத்து இம்மட்டும் உங்களை பத்திரமாக நடத்தி யுள்ளார். அதற்காக தேவனை துதியுங்கள். ஆம், கர்த்தர் நல்லவர்! தொடர்ந்து உங்களை எல்லா கொள்ளை நோய்களுக்கும், திகிலுக்கும், நஷ்டங் களுக்கும், சடிதியான ஆபத்திற்கும் விலக்கிக் காப்பார். **(ஏசாயா 31:5; சங்கீதம் 91)** உங்கள் போக்கையும், வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் காப்பார்.

**Ministry of Jesus YouTube** சேனல் வாயிலாக அதிகாலை 5.00 மணிக்கு ஒளிப்பரப்பாகும் அனுதின அற்புதம் நிகழ்ச்சியை பாருங்கள். உங்கள் நண்பர் களுக்கும் Share செய்யுங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக!

கிறிஸ்துவின் பணியில்
Dr. **ஜேன் ஜாஷ்வா**

**இம்மாத வாக்குத்தத்தம்**

**சங்கீதம் 23:5; 1பேதுரு 2:4-5**
**ரோமர் 8:37; எரேமியா 20:11a**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

**மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 95004 87061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.**

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 95004 87061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.

**எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்**


Ministry of Jesus - Dr. Ananda Stira


Dr Jane Joshua

My Deliverance Church

**எமது முகநூல் பக்கங்கள் (Face book)**

- Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in
- Ananda Stira @dranandastira
- Margretstira
- Jane Joshua @DrJaneJoshua
- My Deliverance Church @mydeliverance.church
- Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesrajstira

ministryofjesus.in

drjane15

## கன்னியாகுமரி மற்றும் சென்னை பகுதியிலுள்ள அன்பரின் ஊழியப் பங்காளர்கள் கவனத்திற்கு

நமது அன்பரின் ஊழியப் பிரதிநிதிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவே உங்கள் ஜெப வேண்டுதல்களை அவர்களிடம் கூறி ஜெபித்துக் கொள்ளலாம். மேலும், நமது ஊழிய விபரங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**கன்னியாகுமரி : 82203 17472**
**சென்னை : 77081 53666**



# ஜீவ நதிகள்

தேவ செய்தி
Dr. ஆனந்த ஸ்திரா

**"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" – யோவான் 7:38**

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே!

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். சீதோஷண சூழ்நிலையும், இயற்கை சூழலும் மாறிக் கொண்டே இருக்கிற இந்த காலத்தில் நீங்கள் நல்ல சுக, பெலத் துடன் இருக்கும்படி நான் அதிக மாக தேவனிடத்தில் வேண்டிக் கொள்கின்றேன்.

ஏனென்றால், அநேகர் இந்த நாட்களில் மழையாலும், சீதோஷண மாற்றங்களினாலும் பல வியாதிகளுக்கு உள்ளாகி கஷ்டப்படுகின்றனர். ஜலதோஷம், நெஞ்சு வலி, டெங்குகாய்ச்சல், சிலருக்கு கொரோனா, நிமோனியா போன்ற வியாதிகளால் ஆயிரக்கணக்கான மக்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

**மாபெரும் சுகமளிக்கும் வைத்தியராகிய இயேசுகிறிஸ்து தாமே இத்தகைய வியாதி களால் கஷ்டப்படுகிற மக்களையும், நம் அன்பரின் ஊழிய பங்காளர்கள் ஒவ்வொரு வரையும் தம்முடைய தழும்புகளால் குணமாக்குவாராக.**

**பல இடங்களில் மக்கள் வேலையை இழந்து மிகுந்த கவலை, கஷ்டங்களோடு குடும்பத்தை எப்படி நடத்துவோம் என்று கலங்குகிற பிள்ளை களும் உண்டு. ஒவ்வொரு தேவ பிள்ளையையும் கர்த்தர் அற்புதமாக பாதுகாத்து அவர்கள் வாழ்வில் நிறைவை தந்து ஆச்சரியமான முறையில் அவர்கள் தேவை களை நிறைவாக்கி, மனச்சோர்வை அகற்றி கடனற்ற வாழ்வை தருவாராக! (உபாகமம் 28:12 -14; மத்தேயு 6: 33; பிலிப்பியர் 4: 19; சங்கீதம் 91: 1-16)**

அன்பு தேவ பிள்ளைகளே! அனுதினமும் உங்களை நினைவு கூர்ந்து உங்களுக்காக கண்ணீரோடு ஜெபிக்கிறேன். பொதுவாகவே இரவு நேரங்களில் நான் அதிக நேரம் தேவனோடு செலவழிப்பேன். சமீபத்தில் சுமார் ஐந்து வாரமாக நான் மிகவும் பெலவீனப்பட்டு மரணத்திற்கு ஏதுவாக இருந்தாலும் கர்த்தர் தமது பரலோக தரிசனத்தை கொடுத்து என்னை பலப்படுத்தி மீண்டும் தம் ஊழியத்தில் நிறுத்தினார்.

எனது சுகத்திற்காக கண்ணீரோடு உபவாசத் தோடு ஜெபித்த ஏழு வயது சிறுமி முதல் பெரியோர் வரை அனைவருக்கும் என் நன்றியை தெரிவிக்கிறேன். **மத்தேயு 18:19,20**-ன்படி கர்த்தர் உங்கள் கண்ணீரின் ஜெபத்தை கேட்டு தமது ஊழியத்தை செய்ய எனது ஜீவனை கூட்டி கொடுத்தமைக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்!

இந்த மாதமும் உங்களுக்காக என்ன செய்தி கொடுக்க வேண்டும் என்று காத்திருந்தப்பொழுது கர்த்தருடைய சிங்காசனத்திலிருந்து புறப்படுகிற

பரிசுத்த ஆவியாகிய ஜீவ நதிகளை குறித்து எழுதும்படி தேவன் எனக்குக் கட்டளையிட்டார். இந்த உலகத்தில் நாம் காண்கிற அனைத்து நீர் வீழ்ச்சிகளும், நதிகளும், கடல்களும் கர்த்தருடைய வருகையின்போது ஒன்றுமில்லாமல் போகும். ஆனால் பரிசுத்த பிதாவின் சிங்காசனத்திலிருந்து வருகிற அந்த ஜீவ நதி வற்றாத நீருற்றாய் இருந்து நமக்கு நித்தியம் நித்தியமாய் வாழ்வு தரக்கூடியதாக இருக்கும். **பளிங்கை போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்கானத் திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். (வெளி. 22:1)**

என்னை தாக்கிய கொடிய நிம்மோனியாவின் நிமித்தம் நான் அதிக பாடுபட்டேன். அதற்கான சிகிச்சைகள் அனைத்தையும் நான் எடுத்துக் கொண்டேன். அத்துடன் **என் அறை முழுவதும் பரிசுத்த வேதாகமத்தின் வசனங்கள், தேவனை ஆராதிக்கின்ற உருக்கமான அபிஷேக பாடல்கள் மற்றும் கர்த்தருடைய சிலுவை தியானப் பாடல் களையும் கேட்டுக்கொண்டே இருந்தேன். தேவனுடைய பிரசன்னம் என் மீது பலமாக இறங்கினது. பரலோகமே என் அறைக்கு வந்தது போல உணர்ந்தேன்.**

பல பரிசுத்தவான்கள் இயேசுவிற்காக பட்ட பாடுகளையும் அந்த பாடுகளின் மத்தியிலும் கிறிஸ்துவை மறுதலியாமல் வாழ்ந்து, இறுதியில் வெற்றி வாகை சூடினதையும், தூதர்கள் முன்பாக இயேசு அவர்களை கனப்படுத்தி, அவர்கள் கண்ணீரை துடைத்ததையும் பார்த்தேன். சோர்ந்து போன நிலையிலிருந்த எனக்கு முன்பாக பலத்த தூதன் ஒருவன் காட்சியளித்தான்.

நான் ஒரு பெரிய அறுவடை வயலில் இருப்பதை கண்டேன். அது பல ஆயிரக்கணக் கான மைல்கள் சென்றது. அதின் மத்தியில் நான் சோர்வுற்று பலவீனமாக தரையோடு தரையாக, செயலற்றுப் போன நிலையில் இருந்தேன். அப்பொழுது தூதன் **"எழுந்திரு கர்த்தர் உன்னை திடப்படுத்துகிறார்; நீ சீக்கிரமாய் இந்த பெரிய அறுவடையை முடிக்க வேண்டும்"** என்று கூறினான். நானோ அந்த தூதனை பார்த்து **35 வருடமாக என் தேவனுடைய ராஜ்யத்திற் காய் அதிக கடினமாக உழைத்துவிட்டேன். இனிமேலும் என்னால் உழைப்பதற்கும், இந்த வயலை அறுப்பதற்கும் பெலனில்லை"** என்று கூறினேன். அப்பொழுது **"கலங்காதே! உனக்கு பின்னாக உண்மையோடுகூட உன்னை நேசிக்கின்ற, உனக்காகவும், உன் குடும்பத் திற்காகவும் கண்ணீரோடு ஜெபிக்கவும், ஊழியத்தின் பல தேவைகளை சந்திக்கவும் நல்ல பங்காளர்களை உனக்குக் கொடுத்திருக் கிறேன். அவர்கள் எல்லாரும் உனக்காக உபவாசம் இருந்து கண்ணீரோடு ஜெபிக் கிறார்கள். அவர்கள் ஜெபம் பரலோகத்தை எட்டியது. ஆகையால் நான் வந்திருக்கிறேன்"** என்று கூறினார். **அப்பொழுது என் கால்களும், கரடுகளும் பெலன் கொண்டது. மூச்சு விட முடியாத நிலையில் இருந்த நான் என் படுக்கையிலிருந்து எழும்பி உட்கார கர்த்தர் உதவி செய்தார். அதிக பிரகாசமான ஒளி என் படுக்கையை சுற்றி பிரகாசித்தது. அந்த நேரத்தில் தான் தேவனுடைய சிங்காசனம் எனக்கு முன்பாக காட்சியளித்தது. வெளி. 22:1-ன்படி தேவனுடைய சிங்காசனத்தில் ஓடுகிற தெள்ளத் தெளிவான ஜீவ நதிகளை நான் கண்டேன். அந்த நதிகள் செல்லும் இடமெல்லாம் கனிதரும் பல்வேறு ஆரோக்கியம் தரும் விருட்சங்களும் இருந்தது. அந்த ஜீவ நதியில் ஏழுவிதமான நீர் ஊற்றுகள் மிகவும் உயரமாக பொங்கி எழுந்ததை கண்டேன்.**

கர்த்தருடைய ஆவியானவர்தான் இந்த ஜீவ நதி என்பதை தெரிந்துக் கொண்டேன். இதுவரை இயேசு எவ்வளவு பெரியவர் என்று நான் அறிந்துள்ளேன். பிதா வாசம் செய்யும் இடத்தையும் அறிந்திருக்கிறேன். ஆனால் பரிசுத்த ஆவியான வருடைய முழு பெலத்தையும், வியாபித்தலையும், அவருடைய வல்லமையையும் சற்று அறியாத வனாகவே இருந்தேன்.

எனது 32ஆம் வயதில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், நவமான பாஷை பேசும் வரத்தையும் பெற்றேன். அதன்பிறகு நான் கலந்து

கொள்ளும் கூட்டங்களில் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அநேக அற்புதங்களும், அடையாளங்களும் கர்த்தருடைய நாம மகிமைக் கென்று நடைபெற்றன. மரித்தோர் எழுந்தார்கள்; உடல் உறுப்புகள் இல்லாத வர்களுக்கு உறுப்புகள் வளர்ந்தன; பேய்கள் ஓடின, லட்சக்கணக்கானவர் கிறிஸ்துவண்டை நடத்தப் பட்டனர். நான் செய்தி கொடுக்கும் வேளையில் பலர் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்று அபிஷேகத்தில் முழ்கினர்.

**புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்து வானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவை களைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை ரோமர் 15: 18**

எனினும், தேவ ஆவியானவருடைய முழு தன்மையை உணர முடியாதவனாய் இருந்தேன். வேதம் சொல்கிறது,கர்த்தரே ஆவியானவர்! **(2கொரி. 3:17; யோவான் 4:24)** பிதாவாகிய தேவனையும், இயேசு கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியானவரையும் ஒரு போதும் நாம் பிரிக்க முடியாது. மூவரும் ஒருவராக இருக்கின்றனர். அப்படி இருக்க பிதாவினிடத்தில் இருந்து புறப்பட்டு வருகிறவரே பரிசுத்த ஆவியானவர். இந்த பரிசுத்த ஆவியானவருடைய ரூபத்தை அறிய முடியாது.

காற்று வீசுவதை நாம் உணருகிறோம், எந்த திசையிலிருந்து வருகிறது என்பதை அறியலாம், ஆனால் பார்க்க முடியாது. அதே போல பரிசுத்த ஆவியானவரும் பிதாவினிடத் திலிருந்து வருகிறார் என்பது நமக்கு தெரியும், ஆனால் அவரை பார்க்க முடியாது, உணர்ந்து கொள்ளலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவர் இரத்தத்தால் கழுவப்பட்டு, தாகத்தோடு பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்திற்காக கேட்கும் பொழுது, இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் வேண்டிக் கொள்ளும்பொழுது ஆவியானவரின் அபிஷேகம் நமக்கு கிடைக்கிறது.

**"என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்தி லிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" - லூக்கா 24 : 49**

**மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று சர்வ வல்ல தேவன் வாக்குக் கொடுத்திருக்கிறார் (அப். 2:17).** அவருடைய ஊழியக்காரர்கள் மேல் அவரது தூய அபிஷேகத்தை ஊற்றுகின்றார். இயேசு கிறிஸ்துவின் காயங்களை நினைவு கூர்ந்து அவர் மீது அன்பு வைத்து அவரது தியாகத்திற்காக ஸ்தோத்தரிக்கும்பொழுது, ஆராதிக்கும் பொழுது இந்த அபிஷேகத்தை பெற்றுக் கொள்கிறோம். மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும் பொழுது இந்த அபிஷேகம் கிடைக்கிறது. தாகத்தோடு கேட்கும் பொழுது பெற்றுக் கொள்கிறோம். **(மத்தேயு 7: 7- 14; அப். 2: 38)**

எனினும் இந்த முறை பரலோக தரிசனத்தை நான் பார்க்கும்பொழுது, வல்லமை யான பரிசுத்த ஆவியானவர் பிதாவினுடைய சுவாச காற்றாக இருப்பதை நான் கண்டேன். அந்த சுவாசகாற்றாகிய தூய ஆவியானவர் பலத்த விதமாக கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் ஒன்றோடு ஒன்றாக மோதினால் அல்லது கோடிக் கணக்கான கடல்கள் ஒன்று சேர்ந்து ஒரு பள்ளத்தில் பெரும் வீழ்ச்சியாக விழுந்தால் எப்படிப்பட்ட ஆரவார சத்தம் கேட்குமோ அதுபோலத்தான் தூய ஆவியானவர் பிதாவின் சமூகத்திலிருந்து புறப்படுவதை கண்டேன். அந்த பலத்த காற்றானது கோடிக்கணக்கான நட்சத்திரங்களையும், கிரகணங்களையும் நகர்த்தி, ஓடச்செய்வதையும் கண்டேன்.

தூய ஆவியானவரின் சுவாசம் ஜீவராசிகள் அனைத்திற்குள்ளும் செல்வதையும் கண்டேன். பெரிய பெரிய ஜீவராசி முதற்கொண்டு, சிறு சிறு எறும்புகள், பாக்டீரியா, அமீபா வரைக்கும் இந்த தூய ஆவியானவரின் சுவாச காற்றில் வாழ்கின்றன என்பதையும் கண்டேன். பறப்பன, ஊர்வன, நீர் வாழ்வன மற்றும் பூமியில் நடமாடும் அத்தனையும் இதில் அடங்கும்.

அந்த நேரத்தில் என் ஆவி எனக்குள் தொய்ந்து போயிற்று. அப்பொழுது தூதன்

என்னை கரம் தூக்கி என்னை படுக்கையில் கிடத்தினான். அந்த சமயம் உங்கள் அன்பு சகோதரியான என் மனைவியும், என் பேரன் **ஜோனத்தன்,** மகள் **ஜேன்** மற்றும் மருமகன் Rev.**ஜாஷ்வா** எனக்காக மிகவும் கண்ணீரோடு என் ஜீவனுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். அன்பிற்குரிய சில தேவ பிள்ளைகளும் என் நிலைமையை அறிந்து எனக்காக ஜெபித்தார்கள். அப்பொழுது தூதன் என்னைப் பார்த்து இந்த மகா பரிசுத்தமான கர்த்தரிடத்திலிருந்து புறப்படுகிற பரிசுத்த ஆவியின் முழு வல்லமையை நீ இப்பொழுது அறிந்துக்கொள்வாய் என்று கூறினான். அங்கு நான் பார்த்ததை உங்களுக்கு ஜெபத்தோடு எழுதுகின்றேன்.

## 1. தூய ஆவியானவர் அழுக்குகளை நீக்குகிறார்!



சுட்டெரிப்பின் ஆவியானவர் நம் சரீரங் களையும், உள்ளங்களையும் பரிசுத்தப்படுத்து கின்றார். **அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப் பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது, சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்ட வனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படு வான் - ஏசாயா 4 : 3, 4**

**கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட அனைவரின் இதயத்திலுள்ள, சரீரத்திலுள்ள அனைத்து அழுக்குகளையும், மாம்ச பெலவீனங்களையும் இந்த பெரு வெள்ளமான பரிசுத்த ஆவியானவர் தாமே நீக்கி அவைகளை சுட்டெரிக்கிறார். வேண்டாத வைகள் அனைத்தும் நீக்கப்பட்டு, கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்தரை தரிசிக்கத்தக்கதாக அவர்களையும் தேவனுக்கு ஏற்றவிதமாக பரிசுத்தமாக்குகிறார். (2தெச.2:13).** பழைய மனுஷன் அழிந்து உள்ளான மனுஷன் பெலப் பட்டு, தேவ சாயலாகவே மாற்றப்படுகின்றான். **(கொலோசெயர் 3: 9, 10; எபேசியர் 4:23)**

**நாம் இரட்சிக்கப்பட்டு, மற்றவர்கள் பார்வையிலும், நம் பார்வையிலும் நீதிமான்களாக காணப்பட்டாலும் தேவனுக்கு முன் நாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறோம் (ஏசாயா 64:6) பலத்த சூறாவளி காற்றானது அசுசி களையும், துகள்களையும் அடித்துக் கொண்டுப் போவதுப் போல நமக்குள் இருக்கிற நீக்க முடியாத பெலவீனங் களையும், அழுக்குகளையும் ஆவியானவர் நீக்குகிறார். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்!**

கிறிஸ்துவை நன்கு அறிந்த ஒரு தேவ மனிதர் என்னை சந்திக்க வந்தார். அவர் தம்மை குறித்து மிகவும் நல்ல காரியங்களை கூறினார். அவர் வருடத்திற்கு மூன்று முறை 40 நாட்கள் உபவாசம் இருக்கிறேன், அநேக புத்தகங்களை எழுதியுள் ளேன், ஓய்வு இல்லாமல் ஊழியம் செய்கின்றேன் என்று அவர் பேசிக்கொண்டே இருக்கும் பொழுது தன்னையும் அறியாமல் தூய ஆவியின் வல்லமை யால் கீழே விழுந்தார் **(Slain in the Holy Spirit)** எனக்குள் நிறைவாக பரிசுத்த ஆவியானவர் இருப்பதை ஒரு பேரொளியாக அவர் கண்டு, ஐயோ! நான் அதமானேன், நான் நல்ல ஒரு **Father** என நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தேன். ஆனால் எனக்குள் இவ்வளவு அழுக்குகள் இருக்கிறதே என்று அவர் கதறினார்.

என்னைப் பார்த்து உங்களுக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை என்னால் மேற்கொள்ள முடிய

வில்லை, பெலவீனங்களையும், அழுக்குகளையும் அந்த அபிஷேகம் அகற்றி போடு கிறது. அவைகள் கழிவு போல என் வாழ்க்கையின் ஒரு ஓரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தன. ஆனால், இப்பொழு தோ உங்களுக்குள் இருந்து புறப்படும் தூய ஆவியானவரின் அபிஷேகம் அதை சுட்டெரித்து போட்டுவிட்டது. என் மனதில் இப்பொழுது பெரிய சமாதானத்தை உணர்கிறேன் என்றார்.

தொடர்ந்து அவர் கூறியது, எனது பெருங் குடலில் மிகப்பெரிய கேன்ஸர் கட்டி இருந்தது. மருத்துவர்கள் கண்டிப்பாக அறுவை சிகிச்சை செய்து அதை எடுத்தாக வேண்டும். அப்படி எடுத்தாலும் பாதி தான் எடுக்க முடியும். எனவே என் வாழ்க்கை ஆறு மாதம் தான் என்றார். தினமும் உதிரம் அதிகமாக வெளியேறும். நான் மிகவும் வேதனைப்பட்டேன். ஆனால் உங்களிடமிருந்து வந்த தூய ஆவியானவருடைய வல்லமையால் அந்த பெரிய கேன்ஸர் கட்டி மறைந்தது. உதிரப் போக்கும் நின்று போனது. நான் பரிபூரண சுகம் பெற்றேன். அபிஷேகத்தில் களிகூர்ந்து தேவனை துதித்தேன். நீங்கள் என்னை அன்போடு ஆசீர்வதித்து கர்த்தர் புது அபிஷேகத்தால் நிரப்புகிறார் என்று கூறினீர்கள். உடனே நான் நவமான பாஷைகள் பேச ஆரம்பித்தேன். சந்தோஷத்தோடு எனது ஆலயத்திற்கு சென்றேன். மறுநாள் மாலை மருத்துவரை பார்க்க சென்றேன். அவர்கள் என்னைப் பார்த்து உங்கள் முகம் மிகவும் பிரகாசமாக இருப்பதற்கு காரணம் என்ன என்று கேட்டார்கள். நான் நடந்ததை கூறினேன். சி.டி.ஸ்கேன் எடுக்கப்பட்டது, அதில் கேன்ஸர் கட்டி இருந்த இடம் தெரியாமல் மறைந்திருந்தது என தனது சாட்சியை கூறினார். நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். ஏனென்றால், அவர் நல்ல தேவ மனிதர். ஒரு பெரிய **Congregation**-ன் தலைவர் ஆக உள்ளவர்.

ஆம் எனக்கன்பானவர்களே! தூய ஆவியானவர் நம்மை பிதாவிற்கு ஏற்ற பரிசுத்தவானாக மாற்றுகிறார். தூய ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துகிறார். அதிக நேரங்கள் வேதத்தை வாசித்தாலும் சரியாக புரிந்துக்கொள்ள முடிவதில்லை. நிறைவான அபிஷேகம் நமக்குள் வரும்பொழுது இயேசு சொல்லிக் கொடுத்தபடி நாம் வேதத்தை அறிந்துக்கொள்ளமுடியும்.

உதாரணமாக, நான் ஏழு வயதிலிருந்தே வேதத்தை அதிகமாய் நேசித்தேன், விரும்பி படித்தேன். ஆனால் நான் அபிஷேகத்தை பெறும் வரைக்கும் சரியான சத்தியத்திற்குள் நடத்தப் படாமல் இருந்தேன். எனக்கு வேதம் நன்கு தெரியும் என்று இருந்தேன். ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்ற பொழுது இன்னும் அதிக ஆழமாக புதிதாக செய்யப்பட்ட அப்பம் போல அவர் எனக்கு சகலத்தையும் விளக்கினார். **(யோவான் 14: 8-11)**

ஒரு நாளைக்கு பத்து நிமிடம் மாத்திரம் வேதத்தை படித்தால் போதும் என்று இருந்த எனக்கு அபிஷேகத்தை பெற்ற பின் வேதாகமம் தெவிட்டாத தேனைப் போல மாறினது. படிக்க படிக்க இன்னும் படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் வந்தது. நகமும் சதையும் போல நானும், பரிசுத்த வேதாகமமும் ஒன்றாகிவிட்டோம். **வேதத்தை நான் சற்றும் மறக்காதபடி பரிசுத்த ஆவியானவர் என் இதயத்திற்குள் எழுதினார். (எபிரெயர்8: 10)**



வேதத்தின் மீது ஒரு மனமகிழ்ச்சி ஏற்பட்டது. அதன்படி நடக்க வேண்டும் என்கிற ஆர்வமும், வார்த்தையை மறக்கக்கூடாது என்ற தாகமும் உண்டானது. ஒத்த வசன பைபிள் இல்லாமலேயே பரிசுத்த ஆவியானவர் எந்த எந்த இடங்களில் ஒத்த வசனங்கள் இருக்கிறது

என்பதை எனக்கு வெளிப்படுத்துவார். ஒரு செய்தியை இடத்திற்கு ஏற்றபடி பல நூறு ஒத்த வசனங்களை வைத்து செய்தி கொடுக்கும்படி கர்த்தர் கிருபை செய்தார். தூய ஆவியானவர் உங்களுக்குள் வரும்பொழுது நீக்கமுடியாத அழுக்குகளை நீக்கி உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்.

## 2. உயிர்ப்பிக்கும் ஆவியானவர்

**எசேக்கியேல் 37:5** முதல் 10-ன் படி உலர்ந்த எலும்புகளின் மேல் எசேக்கியேல் தீர்க்கதரிசி தன்னுடைய தரிசனத்தில் ஆவியை ஊதும்பொழுது அவைகள் எழும்பி தசைகளையும், நரம்புகளையும், சரீரத்தையும் உடைய மகா பெரிய சேனையாக எழும்பினதை நாம் பார்க்கிறோம். அதேபோல தூய ஆவியானவர் நமக்குள் வரும்பொழுது செத்தவர்கள் எல்லாம் உயிர் அடைவர். **வெளி. 3:1-ன்** படி உயிருள்ள சபை என்று பேர் பெற்ற சர்தை சபையானது தேவனுடைய பார்வையில் செத்ததாக இருந்தது என்று வாசிக்கிறோம்.

உண்மையான தேவனுடைய அனல் வரும் பொழுது சபைகள் உயிர் மீட்சி அடைகின்றன, வளருகின்றன. வட இந்தியாவில் நான் ஒரு இடத்திற்குச் சென்ற பொழுது என்னை யார் என்றே அங்குள்ள ஒருவருக்கும் தெரியவில்லை. அபிஷேகத்தின் வல்லமையால் அங்கு நடந்த கூட்டத்திற்கு 22 ஆயிரம் பேர் வந்திருந்தனர். நூறு பேரைக் கொண்டு சபையை நடத்தி, கடினமாக உழைக்கிற ஒரு போதகர் அந்த கூட்டத்தை ஒழுங்கு செய்தார். நடந்தது என்ன? ஆயிரக்கணக்கானோர் தேவனுடைய அன்பைக் குறித்து கேள்விப்பட்டு தங்கள் வாழ்வின் கண்ணீர் துடைக்கப்பட்டு அற்புதங்களை பெற்றுச் சென்றனர். இன்று அந்த போதகர் மகிழ்ச்சியோடு இருக்கிறார். ஏனென்றால் அந்த அபிஷேக கூட்டத்திற்கு பிறகு அவரது சபையில் மூவாயிரம் பேர் அங்கத்தினர்களாக மாறினர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அன்பின் சுவிசேஷத்தை சாதுர்ய ஞானம் இல்லாமல் பிரசங்கிக்க வேண்டும். தேவ பிள்ளைகளுக்கு அவ்வப்பொழுது வல்லமை முகாம் நடத்தி அவர்களை பிரகாசிக்க செய்யவுமே கர்த்தர் என்னை அழைத்தார். நமது கூட்டங்களை ஒழுங்கு செய்கிற அனைத்து சபைகளிலும் கூட்டங்களுக்கு பிறகு ஒரு பெரிய உயிர் மீட்சியை காண முடியும்.

இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் செயல்படும் பொழுது உலர்ந்த எலும்புகள் ஜீவன் பெற்று, செத்துப் போன சரீரம் உயிர் பெறுகிறது. ஒரு சமயம் திருநெல்வேலி செல்வி மஹாலில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடந்து கொண்டு இருந்தது. ஹால் முழுவதும் ஜனங்கள். முதல் ஆராதனைக்கு பிறகு நான் ஜெபிக்க ஆரம்பித்தேன். திடீரென்று ஓலமிடுகிற சத்தம் கேட்டது. என்னவென்றால், கூட்டத்தின் பின் பகுதியில் அநேகர் எழும்பி சத்தமிட்டு அழுதனர். காரணம் சூசை ராஜ் என்பவரின் இருதயம் 99 சதவிகிதம் **(99% Failure)** செயலிழந்த நிலையிலேயே கூட்டத்திற்கு கொண்டு வரப்பட்டார். சிறிது நேரத்தில் அவர் இறந்து போயிருந்தார். இதைக் கண்ட ஜனங்கள் கலைய ஆரம்பித்தனர். அப்பொழுது நான் மேடையிலிருந்து **"மரித்தோர் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும் நீங்களோ என் பிரசங்கத்தை கேளுங்கள்"** என்றேன். அப்பொழுது என்னில் காணப்பட்ட நிறைவான ஆவியானவர் **"உனக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் இல்லையா"** என்று கேட்டார். நீ அந்த இறந்துபோன சடலத்தை எழுப்பு என்றார். என் முன் இருந்த மைக் வழியாக ஊது என பணித்தார். இதைக் கேட்டு நான் திடுக்கிட்டேன். அக்கூட்டத்திற்கு எங்களை அதிகமாய் நேசிக்கிற மருத்துவர்களும் வந்திருந்தனர். **(Dr.Mrs. Judith,**



M.D.,D.D., & Dr.Christopher, M.D.D.A.) நான் Dr.Christopher -ஐ பார்த்து அந்த நபரை பரிசோதனை செய்ய சொன்னேன். அவர் சென்று பார்த்துவிட்டு அந்த நபர் இறந்துவிட்டார் எனக் கூறினார். அப்பொழுது நான் எல்லாரையும் அமைதியாக இருக்க சொல்லிவிட்டு அந்த மைக்கில் ஊதினேன், எல்லாரும் ஆச்சரியப்படும் படியாக பிணம் உயிர் பெற்று எழும்பி நின்றது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

கர்த்தருக்கு மகிமையாக சில உண்மை சம்பவங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

புனிதா என்னும் ஒரு சகோதரிக்கு பிறந்து சில வருடங்களே ஆனநிலையில் அவருடைய இரண்டு கண்களிலும் பூ விழுந்து அழுகிப் போன நிலையில் வாழ்ந்து வந்தாள். அவளுடைய கண்களில் ஊதினபொழுது பூ விழுந்த கண்கள் நீக்கப்பட்டு புது கண்களை அவள் பெற்றாள்.

சூம்பின கை, கால்களுடன் வந்த தினகரன் என்னும் சிறுவனுக்கு கை, கால்கள் வளர்ந்தன.

**ஆம் எனக்கன்பானவர்களே! கர்த்தரிட மிருந்து புறப்படும் வல்லமையின் ஆவியானவர் உங்களுக்குள் வரும்பொழுது எல்லாம் முடிந்து விட்டது என்று நினைக்கிற காரியங்களையும் உயிர்ப்பித்து, தழைக்கச் செய்து உங்களை மேன்மைப்படுத்துவார் (சங்கீதம் 71: 20 - 24).**

**கடன் பாரங்கள், வேலை இல்லாமை, தொடர்ந்து தாக்கும் தீய ஆவிகள், பைத்திய ஆவிகள், சமாதானமற்ற தன்மைகள், மரணத்தின் இக்கட்டுகள், தொழில் நஷ்டங்கள், வாழ்க்கையில் முன்னேற முடியாமை, தீராத வியாதி இவை எல்லா வற்றையும் கர்த்தருடைய ஆவியானவர் உங்களைவிட்டு அப்புறப்படுத்தி மீண்டும் உங்களை உயிர்ப்பிப்பார். (சங்கீதம் 66:12,14)**

எவ்வளவு பயங்கரமான வெள்ளம் போன்ற சோதனைகளிலும் நெருப்பை போன்று வேதனைப்படுத்தும் காரியங்களை நீங்கள் கடந்து சென்றாலும் அவைகள் உங்களை மூழ்கடிப்ப தில்லை. அதற்கு மாறாக வெற்றியின் மேல் வெற்றி பெற்று சிறப்பீர்கள்.



**"நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும் போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது" ஏசாயா 43: 2**



தானியேலின் நண்பர்கள் நெருப்பில் போடப்பட்டாலும் அவர்களுக்குள் இருந்த விசேஷித்த ஆவியானவர் இயேசுவாக தோன்றி நெருப்பு அவர்களை சேதப்படுத்தாதபடி காப்பாற்றினார். நம் அன்புள்ள இயேசுவை அன்று கொடூரமாக துன்பப்படுத்தி, நூற்றுக்கணக்கான காயங்களை ஏற்படுத்தி உடலை பல்வேறு சித்ரவதைக்குள்ளாக்கி கொலை செய்தார்கள். அந்த செத்த சரீரம் மூன்றாவது நாள் உயிரோடு அதே மாம்சத்தோடு வந்தது. மாம்சத்தில் உயிரோடு வந்த இயேசுவை நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவர் என்னை தொட்டிருக்கிறார், நான் அவரை தொட்டிருக்கிறேன் **(லூக்கா 24: 39; வெளி. 1:18)** மரித்து நான்கு நாள் ஆன லாசருவை உயிர்ப்பித்த ஆவியானவர் உங்களையும் உயிர்ப்பிப்பார்.

## 3. வழி நடத்தும் ஆவியானவர்!

தேற்றரவாளனாகிய ஆவியானவர் நாம் பரலோகம் செல்லும் வரைக்கும் நம்மை பத்திரமாக காத்து செம்மையான வழியில் நம்மை நடத்துவார்.

**உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக சங். 143:10**

**நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் - யோவான் 14: 18, 16**



மனிதனுடைய வாழ்க்கையில் தனிமை என்பது மிகப் பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இயேசு தம் சீடர்களை பார்த்து, என்னை சிலுவையில் அறைவார்கள். நான் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழும்புவேன் என்று கூறினப்பொழுது சீஷர்களின் உள்ளங்கள் துக்கத்தால், வேதனையால் நிறைந்தது. **(யோவான் 16:6)** மூன்றரை வருடம் குருநாதர் இயேசுவின் சமூகத்தில் இன்புற்று வாழ்ந்த அவர்கள் வாழ்க்கையில் பெரிய தாக்கம் உண்டானது. போதகர் நம்மைவிட்டு போய் விட்டால் யார் நம்மை நடத்துவார் என்று அவர்களுக்குள் ஒரு பெரிய கேள்வியும், திகிலும் ஆட்கொண்டது. அப்பொழுது தான் இயேசு அவர்களை பார்த்து **"நான் பிதாவினிடத்திலிருந்து வந்தேன், அந்த பரலோக பிதாவிடமே போகிறேன்"** என்றார். அதேபோல உயிர்த்தெழுந்து 40 நாள் தமது சீஷர்களுக்கு பிரத்தியட்சமாக காட்சியளித்து பின்னர் விண்ணுலகிற்கு சென்றார். மேலும் இயேசு சீஷர்களை பார்த்து **"நீங்கள் எருசலேமில் கூடி ஜெபியுங்கள், காத்திருங்கள். அப்பொழுது நான் வேண்டிக் கொண்ட படியே பிதா தம்முடைய தூய ஆவியான வரை உங்கள் மேல் அனுப்புவார். (லூக்கா 24:49) நீங்கள் பெலனடைந்து எனக்கு சாட்சிகளாக இந்த உலகத்தை அசைப்பீர்கள், பலத்த அற்புதங்களை கொண்டு வருவீர்கள்.**

**(அப். 5: 12-16) ராஜ்யத்தின் சுவிசேஷத்தை உலகமெங்கும் பிரசங்கிப்பீர்கள்! என்னைப் பார்க்கிலும் என் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாய் பெரிய காரியங்களை செய்வீர்கள் (யோவான் 14:12-14) என்று அவர்களை ஆறுதல்படுத்தினார்.**



அதேபோல **சீஷர்களும், அவர்களோடு 120 பேரும் இயேசுவின் தாயாரும், அவர்கள் சகோதரரும் பத்து நாள் காத்திருந்து ஜெபித்த பொழுது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் பலமாய் இறங்கினார். பயந்து ஒளிந்து கொண்டிருந்த சீஷர்கள் எருசலேம் தொடங்கி பல நாடுகளுக்கு சென்று சுவிசேஷத்தை தூய ஆவியின் வல்லமை யோடுகூட பிரசங்கித்தார்கள். யோவானை தவிர மற்ற எல்லோரும் இரத்த சாட்சியாக மரித்தார்கள். ஒருவர் கூட பயந்து ஓடவில்லை, இயேசுவை மறுதலிக்கவும் இல்லை. (சங்கீதம் 51: 10-12; அப். 1:8; மாற்கு 16: 20)**

நான் சிறுவயதிலிருந்து தேவனுக்கு பயந்து தீமைக்கும், உலகின் தீய காரியங்களுக்கும் விலகி இருந்தாலும் அவ்வப்பொழுது ஒரு தனிமை உணர்வு என்னை வேதனைப்படுத்தியது. இயேசுவை நான் ஏற்றுக் கொண்டப்பிறகும், அவருக்கு பிரியமாக வாழ்ந்தப்போதும் தனிமை உணர்வினால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டேன். நல்ல ஒரு ஜெபிக்கிற மனைவி, அன்புள்ள பிள்ளைகள் இருந்தும் எனக்கு எதன் மீதும் பற்றில்லை. இதனால் ஒரு விரக்தி என்னுடைய மனதில் ஆழமாக இருந்தது. இந்நிலையில் தான் எனது மனைவி மூலம் பரிசுத்த ஆவியானவரை அறிந்து கொண்டேன். ஆறுதலும் தேறுதலும் அடைந்தேன். பரிசுத்த ஆவியான வருக்காக நாங்கள் உபவாசித்து வீட்டிலே தாகத்தோடு கண்ணீரோடு ஜெபித்த பொழுது ஆவியானவர் அந்த நாளில் என்னை அற்புதமாக வல்லமையாக நிரப்பினார்.

அந்த நாளிலிருந்து

1. **நான் நடக்க வேண்டிய வழி இதுவே என்ற எனக்கு சொல்லிக் கொடுத்தார்! (ஏசாயா 30:21 அப். 8: 26 29)**
2. **எல்லாவித எதிர்ப்புகள், துன்பங்கள் மத்தியில் என்னை தளராமல் ஒரு தகப்பன் பிள்ளையை தூக்கி சுமப்பது போல சுமந்து சாத்தானின் கோரமான துன்புறுத்தல் என்னை சேதப்படுத்தாதபடி காத்துக் கொண்டார். (உபாகமம் 1:31; ஏசாயா 66:13**
3. **கர்த்தர் இயேசு தம்முடைய ஊழியத்தை செய்ய என்னை அழைத்த பின் எத்தனை ஆயிரம் மக்கள் வந்தாலும் அல்லது குறைவான மக்கள் வந்தாலும் அவர்களுக்கு வேத வசனங்களை கலப்பு இல்லாமல் பேசும்படி என் அருகிலேயே இருந்து சொல்லிக் கொடுத்தார்.**
4. **ஞானத்தின் ஆவியாலும், ஆலோசனையின் ஆவியாலும், கர்த்தருக்கு பயப்படும் பயத்தின் ஆவியாலும், பெலனை அருளும் ஆவியாலும் என்னை நிரப்பினார் (ஏசாயா 11:2) இதன்மூலம் இயேசுவிற்காக எழும்பி பிரகாசிக்க அநுக்கிரகம் செய்தார்.**
5. **ஜாதி, இன, தகுதி வேறுபாடின்றி எவரையும் குற்றப்படுத்தாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகப் பிரகாரமான ஞானத்தால் அல்ல எல்லாரும் விளங்கிக் கொள்ளும்படியாக சமயத்திற்கு ஏற்றபடி அந்த ஜனங்களின் உள்ளத்திற்கு ஏற்றபடி பேச சொல்லிக் கொடுத்தார்.**
6. **பலத்த அற்புதங்களை செய்தார். இரவு முழுவதும் பல மணி நேரம் அவரோடு பேசும் சிலாக்கியத்தை கொடுத்தார்.**
7. **எத்தனை பேய், பிசாசுகள். கோரமான தீய சக்திகள், தள்ளப்பட்ட தூதர்கள் வந்தாலும்**

**பரிசுத்த ஆவியானவர் அதற்கு விரோதமாக கொடி ஏற்றி ஜெயத்தை தந்தார் (ஏசாயா 59:19)**

**8. என் பிள்ளைகளையும் அபிஷேகத்தால் நிரப்பினார், அவர்களையும் வல்லமையாக பயன்படுத்துகிறார்.**

ஆம் எனக்கன்பான தேவ பிள்ளைகளே! நம் உன்னத தேவனாகிய பிதாவின் பரலோகம் செல்லும் வரைக்கும் நம்மை வழுவாது காப்பார். **(யூதா 24,25)** பரிசுத்த ஆவியால் நாம் நடத்தப் படும் பொழுது அவருடைய பிள்ளைகளாக மாறுகிறோம். அப்பா, பிதாவே என்று கூப்பிடப் பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை கொடுத்து பயப்படும் தன்மையை நீக்கி, பாவத்திற்கும், பிசாசுக்கும் அடிமை யாகாமல் ஆவியானவர் உதவியோடு மேலானவை களையே சிந்திக்கிறோம். இதன்மூலமாக சரீரத்தின் செய்கைகள் அழிந்து போகிறது. நாம் தேவனுடைய புத்திரர்களாக மாறுகிறோம். **(ரோமர் 8:14-16; கலாத்தியர் 4: 6,7)**

பரிசுத்த ஆவியால் நடத்தப்பட்ட மோசே, யோசேப்பு, தானியேல், தாவீது, பேதுரு, யோவான், பவுல் ஆகியோர் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்தனர். அந்த பரிசுத்தவான் களை போல நீங்களும் மாற பரிசுத்த ஆவியால் நடத்தப்பட வேண்டும். நிச்சயமாக இந்த செய்தியை வாசிக்கும்பொழுதே அபிஷேகத்தை பெறுவீர்கள். கர்த்தருடைய அபிஷேகம் பெற்ற பிற்பாடு இரண்டு காரியங்களை மனதில் வையுங்கள். **(1) அவர் துக்கப்படும்படியான காரியங்களை செய்யாதீர்கள் (எபேசியர்) (2) ஆவியை அவித்துப்போடாதிருங்கள் (1 தெச 5: 19)**

நீங்கள் ஜெபம் பண்ணும் பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்களோடுகூட வாக்குக்கடங்காத பெருமூச்சோடு ஜெபிக்கிறார். **(ரோமர் 8:26)** உண்மையோடு, அவரை ஆராதித்து ஜெபிக்கும் பொழுது, துதிக்கும் பொழுது ஆவியானவருடைய அபிஷேகம் ஒரு பெரிய அணையின் தண்ணீர் போல நிரம்பி விடுகிறது. அவருடைய சிலுவை அன்பை தியானிக்கும் பொழுது அந்த அபிஷேகம் பெருகுகிறது.


**பரிசுத்த வேதாகமத்தை அதிகமாய் நேசித்து ஆவியானவருடைய துணையோடு வாசிக்கும் பொழுது அபிஷேகத்தில் நாளுக்கு நாள் வளர்வீர்கள். கர்த்தர் தாமே உங்களை நீதியின் பாதையில் நடத்துவாராக! நாங்கள் நடத்தும் ஒவ்வொரு கூட்டங்களுக்கும் தவறாமல் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர் வதிப்பாராக!**







dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org



# Praise Report

# துதி அறிக்கை



## *உன் துக்க நாட்கள் முடிந்துபோம்!*

என் பெயர் நகோமி. பல வருடங்களுக்கு முன்பு பாளையங்கோட்டையில் உள்ள PTR காலனி பகுதியில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடைபெற்றது. **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அந்த நாட்களில் நானும் எங்கள் குடும்பத்தினர் அனைவரும் வறுமையில், கஷ்டமான சூழலில், அதிக சோகத்துடன் மிகுந்த கண்ணீரோடு கூட்டத்திற்கு வந்திருந்தோம். கூட்டத்தின் இறுதியில் ஜெப வேளையில் சகோதரர் அவர்கள் என்னை பெயர் சொல்லி அழைத்தார்கள். **நகோமி, உன் கையில் உள்ளதை நீ எண்ணி எண்ணி செலவு செய்துக் கொண்டு இருக்கிறாய். உன் கஷ்டங்கள் இன்றோடு முடிந்தது. நீயும், உன் வீட்டாரும் உயர்ந்த நிலைக்கு வருவீர்கள் என்றார்கள்.** கூட்டம் முடிந்து கர்த்தரை ஸ்தோத்தரித்து நாங்கள் வீடு திரும்பினோம்.

அதன் பின் எங்கள் வாழ்க்கையில் கர்த்தர் உயர்வை கட்டளையிட ஆரம்பித்தார். **எனக்கு சொந்த வீட்டை கர்த்தர் தந்தார். என் பெரிய தம்பிக்கு கோயம்புத்தூரில் ஒரு பள்ளிக்கூடமும், மேட்டுப்பாளையத்தில் ஒரு பள்ளிக்கூடமும், ஒரு முதியோர் இல்லமும் கர்த்தர் கொடுத்து ஆசீர்வதித்தார். என் இளைய தம்பிக்கும் திருப்பூரில் இரண்டு பள்ளிக்கூடங்களை கர்த்தர் தந்தார்.**

இப்பொழுது எங்கள் வாழ்க்கையில் எந்தவித கஷ்டமும் இல்லை. கண்ணீரும் இல்லை. கர்த்தர் தாமே அந்த நாளில் சகோதரர் மூலம் வழங்கிய வார்த்தையை, விடுதலையை இன்று வரைகாத்து வருகிறார். கர்த்தருடைய நாமத்திற்கு எங்கள் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறோம். சகோதரருக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**- சகோதரி நகோமி, தேவாரம்.**



## *பயப்படாதே, திடமனதாயிரு!*

என் பெயர் திவ்யா. கடந்த 7 மாதங்களாக நான் அதிக பெலவீனத்துடன் இருந்தேன். அதற்காக மருத்துவரிடம் சென்ற பொழுது, பல பரிசோதனைகளை எனக்கு எடுத்தனர். எல்லாம் நார்மல் என முடிவு வந்தது. இருப்பினும், ஒரு வித மனஅழுத்தம், பயம் எனக்குள் இருந்தது. அதற்காக மருந்துகளை எடுத்துக் கொண்டேன். மேற்கொண்டு என்னுடைய கல்லூரி படிப்பை தொடர முடியுமா? என்ற கேள்வியோடு இருந்தேன்.

கடந்த மாதம் சகோதரர் **ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்க வந்தேன். அப்பொழுது அங்கிள், **என் கண்ணீரைத் துடைத்து, நீ படிப்பை தொடரனும் எனக்கூறி, வேத வசனங்கள் பலவற்றைச் எனக்கு சொல்லி, பயப்படாதே, திடமனதாயிருக்கனும்** என்று ஜெபித்து அனுப்பினார்கள். அதன்பின் என்னுடைய சரீர பெலவீனம் மாறி நல்ல முன்னேற்றம் உண்டானது. இப்பொழுது நல்ல சுகத்துடன் கல்லூரிக்கு சென்றுக் கொண்டு இருக்கிறேன். இப்பொழுது எல்லா மருந்து களையும் நிறுத்திவிட்டேன். என் வாழ்வில் இவ்வளவு பெரிய அதிசயத்தை செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். ஏற்ற நேரத்தில் என்னை ஆறுதல்படுத்தி ஜெபித்து அனுப்பிய அங்கிள் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன்.

**- சகோதரி. திவ்யா, திருவெறும்பூர்.**

## *அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, சமதானப் பிரபு, பரிகாரியாகிய கர்த்தர் செய்த நன்மைகள் எண்ணிலடங்கா!*



என் பெயர் சுகந்தி. திருச்சியில் நடைபெறுகிற குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்திற்கு தொடர்ந்து வருகின்றேன். கூட்டத்திற்கு தொடர்ந்து வருவதனால் அநேக நன்மைகளை கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டேன்.

**என் மகளுடைய குடும்ப வாழ்க்கையில் பல பிரச்சனைகள் இருந்தது. இனி மருமகனுடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலைக்கு என் மகள் வந்து விட்டாள். அதற்காக நான் கூட்டத்திற்கு வந்து கண்ணீரோடு ஜெபித்து சென்றேன். இப்பொழுது என் மகள் மருமகனுடன் சேர்ந்து சமாதானமாக வாழ்ந்துக் கொண்டிருக் கிறாள்.**

என் அக்காவின் இரு பேத்திகள் திருச்சியில் உள்ள பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி முடிந்து மாலை வீடு திரும்பவில்லை. வாலிப பெண் பிள்ளைகள் என்பதால் பயத்துடன் அவர்களை தேடிக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் அன்பரின் ஊழிய தொலைபேசிக்கு தொடர்புக் கொண்டு பேத்திகளுக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண டோம். அப்பொழுது **ஐயா, அம்மா இருவரும் பாரத்துடன் ஜெபித்து கவலைப்படாதீர்கள். நாளைக்குள் இருவரும் கிடைத்து விடுவார்கள் என்று சொன்னார்கள். அதன்பின் இரு பேத்திகளும் சென்னையில் இருப்பதாக தகவல் கிடைத்தது. போலீஸ் உதவியுடன் எந்த பாதிப்பும் இல்லாமல் அடுத்த நாளே பத்திரமாக எங்களிடம் இரு பேத்திகளும் வந்து சேர்ந்தார்கள்.**

என் அம்மாவிற்கு 80 வயது. கொரோனா வால் பாதிக்கப்பட்டு ஆக்ஸிஜன் குறைந்துப் போன நிலையில் எதுவும் சொல்லமுடியாது என மருத்துவர்கள் கூறிவிட்டனர். அதற்காகவும் **அன்பரின் ஊழியத்துடன் தொடர்புக் கொண்டு ஜெபிக்கும்படி சொன்னேன். கர்த்தர் பரிபூரண சுகத்தை தந்தார். இப்பொழுது அவர்கள் நன்றாக இருக்கிறார்கள்.**

என் கணவர் இறந்தப் பிறகு பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் எனக்கு அநேக துன்பங் களை கொடுத்தனர். என்னால் வாழ முடிய வில்லையே என்ற நிலைக்கு வந்து விட்டேன். அப்பொழுது **திருச்சியில் நடைபெறுகிற கூட்டத் திற்கு வரும்பொழுதெல்லாம் அதற்காக அழுது ஜெபித்து செல்வேன். தற்பொழுது பக்கத்து வீட்டாரால் வருகிற பிரச்சனைகள் படிப்படியாக குறைந்து முழுவதுமாக நீங்கிவிட்டது.**

கர்த்தர் செய்த இத்தனை அதிசய செயல் களுக்காக கர்த்தரை மனதார ஸ்தோத்தரிக்கி றேன்.

**- சகோதரி சுகந்தி, திருச்சி.**



## மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல!

என் பெயர் உமா தேவ கிருபை. எனக்கு தெரிந்த மூன்று குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கு திருமணம் ஆகாமல் அதிக வேதனையுடன் இருந்தார்கள். ஒரு சகோதரி அதிக வசதியானவர்கள். ஆனால் அவர்கள் மகளுக்கு திருமணம் நடைபெறாமல் அதிக வேதனையுடன் இருந்தார்கள். இன்னொரு குடும்பத்தில் உள்ள சகோதரனுக்கு 40 வயது ஆகிவிட்டது. அவர்களுக்கும் திருமணம் நடை பெறவில்லை. இன்னொரு குடும்பத்தில் உள்ள சகோதரனுக்கும் திருமணதடை இருந்துக் கொண்டே இருந்தது. **நான் இந்த 3 குடும்பத்தினரையும் திருச்சி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் கடைசி சனிக்கிழமையில் நடைபெறுகிற கூட்டத்திற்கு அழைத்து வந்தேன். அவர்கள் உற்சாகமாய் வந்து ஜெபித்து சென்றார்கள். என்னஆச்சரியம்! ஒரே மாதத்தில் 3 குடும்பத்தில் உள்ள பிள்ளைகளுக்கும் ஏற்ற துணை கிடைத்து திருமணம் நடைபெற்றது. கர்த்தர் செய்த இந்த அதிசய செயலுக்காக கர்த்தரை துதிக்கிறேன்.**

**- சகோதரி உமா தேவகிருபை, திருக்காட்டுப்பள்ளி.**

## உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்றது!

என் கணவருக்கு மே மாதம் 22-ம் தேதி அன்று வலது கால், வலது கை செயலிழந்து நடக்க முடியாமல் படுக்கையில் இருந்தார். அப்போது நான் **அன்பரின் ஊழியத்தில் வந்து சாட்சிகளை எடுத்து வாசித்துப்பொழுது எனக்குள் ஒரு விசுவாசம் வந்தது. உடனே நான், இயேசப்பா, என் கணவருக்கும் நீர் சுகம் தரவேண்டும். நான் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என விசுவாசத்தோடு ஜெபித்தேன். அதன்பின் என் கணவர் எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டார்.** எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்த அற்புதத்தைச் செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**- சகோதரி. ராணி ஸ்டாலின், நாகர்கோவில்**


## அன்பரின் ஆறுதல் டி.வி. நிகழ்ச்சி நேரங்கள்

நம்பிக்கை TELEVISION

புதன்

மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.30 – 9.00

தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

ARADANA TV

புதன், வியாழன், வெள்ளி

இரவு 7.00 – 7.30

மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்

HARVEST TV கேரளம்

சனி

இரவு 7.30 – 8.00

**Tamil Whats App No: 95004 87059**



## பணப் பிரச்சனைகளை நீக்கி தொழிலை விருத்தியடைய செய்த தேவன்!

நான் ஏலூரு என்னும் பகுதியில் வசித்து வருகின்றேன். நாங்கள் பழக்கடை வைத்துள்ளோம். வியாபாரம் சரிவர ஆகாததினால் அதிக கடன் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டோம். முன்னேற்றப் பணிக்காக எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் எந்த பயனுமில்லை. ஒவ்வொரு நாளும் கண்ணீரில் நாட்களை கடத்தி வந்தோம். இந்நிலையில் விஜயவாடாவில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடப்பதை கேள்விப்பட்டு அதில் நம்பிக்கையோடு கலந்து கொண்டேன். அந்த ஹால் முழுவதும் கூட்டம் முழுவதும் நிரம்பி இருந்தது. **Dr. ஆனந்தஸ்திரா** அவர்கள் முதலாவது அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்து விட்டு தேவ செய்தி கொடுத்தார்கள். அந்த செய்தி எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. நொறுங்கிப் போன எனது இருதயம் அங்கு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தினால் ஆறுதல் அடைந்தது.

கூட்டத்தின் முடிவில் சகோதரர் அவர்களிடம் தனியே சந்தித்து ஜெபிக்கும்படி சென்றேன். நான் எனது பிரச்சனையை சொல்லாமலேயே **"கர்த்தர் உனக்கிருக்கும் பொருளாதார பிரச்சனைகளை விரைவில் தீர்க்கப் போகிறார், எனவே கலங்காதே!"** என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன். **ஒரு சில வாரங்களில் இப்பொழுது இருக்கும் கடை இல்லாமல், இன்னொரு புதிய பழக்கடையை திறக்கும்படி கர்த்தர் வாசலை திறந்தார். எனது தொழிலை கர்த்தர் ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். நாளடைவில் என் குடும்பத்திலிருந்த பணக்கஷ்டம் தீர்ந்தது.** கர்த்தர் செய்த இந்த அற்புதத்தை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது. என்னை ஆசீர்வதித்த தேவனை மனதார துதிக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! எனது அண்ணன், அண்ணியுடன் திருச்சிக்கு வந்து சகோதரர் அவர்களை சந்தித்து ஜெபித்து சென்றோம்.

சகோதரர் நடத்தும் அப்போஸ்தல தீர்க்க தரிசன வல்லமை முகாமை எங்கள் பகுதியில் ஒழுங்கு செய்திருந்தார்கள். மிகுந்த ஆவலோடு அந்த முகாமில் கலந்துகொண்டோம். அதில் அநேக வேதாகம இரகசியங்களை அறிந்து கர்த்தரை மகிமைப்படுத்தினோம். தேவனுக்குள் இன்னும் ஆழமாக பலப்பட அந்த முகாம் உதவியாக இருந்தது. கர்த்தர் இப்பொழுது எங்களை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தி வருகின்றார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

**- திருமதி. எஸ்தர் ராணி, ஏலூரு**



## மார்பக புற்றுநோய் மறைந்த அதிசயம்!

எனது பெயர் பத்மா. ஒருசில நாட்களாக எனது சரீரத்தில் ஏற்பட்ட பெலவீனத்தின் நிமித்தம் மிகுந்த பாடுகளை அனுபவித்து வந்தேன். மருத்துவ மனையில் பரிசோதனை செய்த பொழுது எனக்கு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாக கூறினார்கள். இதனால் மிகவும் மனமுடைந்து என் வாழ்க்கை அவ்வளவு தான் என கண்ணீரில் நாட்களை கடத்தினேன். எந்த ஒரு காரியத்திலும் ஈடுபாடு இல்லாமல் இருந்தேன். மருந்துகள் உட்கொண்டும் சரீரத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

விஜயவாடாவில் அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடப்பதை கேள்விப்பட்டு நான் கலந்து கொண்டேன். கூட்ட முடிவில்

**Dr.ஆனந்தஸ்திரா** அவர்கள் எனது நிலையை கனிவோடு கேட்டறிந்து, எனக்காக கண்ணீரோடு ஜெபித்து **"இயேசுவின் நாமத்தில் கேன்ஸர் கட்டியே இந்த மகளுடைய சரீரத்தை விட்டு போ"** என்று வல்லமையோடு கூறினார்கள். அந்த ஜெபத்தினால் பயம் நீங்கி, மன ஆறுதல் பெற்றேன். அதின்பிறகு எனது சரீரத்தில் மாற்றம் காணப் பட்டது. **வலி, வேதனை குறைய ஆரம்பித்தது, தொடர்ந்து பரிபூரண சுகம் பெற்றதை உணர்ந் தேன்.**

**குண்டூரில் உள்ள ஒரு மருத்துவ மனைக்கு சென்று பரிசோதனை செய்தேன். அந்த பரிசோதனையில் எனக்கு கேன்ஸர் கட்டி எதுவும் இல்லை, நான் ஆரோக்கியமாக இருப்பதாக கூறினார்கள். இதைக் கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.**

ஜீவனுள்ள தேவன் இயேசு கிறிஸ்து தாமே தம்முடைய ஊழியக்காரர்கள் மூலம் இன்றும் நம் மத்தியில் அற்புத அடையாளங்களை செய்கின்றார் என்பதை உணர்ந்து தேவனை துதித்தேன். எங்கள் பகுதியில் சகோதரர் நடத்துகிற அனைத்து கூட்டங்களுக்கும் தவறாமல் வந்து கலந்து கொள்கிறேன். கர்த்தருக்கே மகிமை!

**- திருமதி. பத்மா, விஜயவாடா**

## *நரம்பு சம்பந்தப்பட்ட நோயிலிருந்து அற்புத சுகம்! தீர்க்கதரிசன வார்த்தையின்படியே மகள் திருமணம் நடந்தது!*

நான் ஆசிரியராக பணியாற்றுகிறேன். கடந்த சில நாட்களாக நான் நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சனையினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். வேதனை ஏற்படும் பொழுது மருந்து மாத்திரை களை சாப்பிட்டால் அந்த நேரத்தில் சுகமாகும், பிறகு அதே வேதனை மீண்டும் வந்துவிடும்.



இதனால் எனது வேலையிலும் என்னால் சரிவர கவனம் செலுத்த முடியாமல் கண்ணீரோடு வாழ்ந்தேன். இந்நிலையில் எனது நண்பர் **திரு.கிஷோர்** மூலம் **Dr.ஆனந்தஸ்திரா** அவர்களை குறித்து அறிந்து தொலைப்பேசியில் அவர்களை தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி கேட்டேன். எனக்காக சகோதரர் அதிக ஊக்கமாக ஜெபித்தார்கள். எனது வேதனை நீங்க வேண்டுமென அவர்களோடு சேர்ந்து தேவனிடம் மன்றாடினேன். **சகோதரர் ஜெபித்த பொழுது வல்லமை எனக்குள் மின்சாரம் போல இறங்கியதை உணர்ந்தேன். அந்த நொடிப் பொழுது எனக்கிருந்த வேதனை முற்றிலும் நீங்கியது. 2016ஆம் ஆண்டு இந்த அற்புதம் எனக்கு நடந்தது. அதின்பிறகு சுமார் 6 ஆண்டுகளாக அந்த வேதனை இல்லாமல் நல்ல சுகத்துடன் இருக்கிறேன்.** கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

அதுமாத்திரமல்ல, ஒரு சமயம் விஜயவாடா கூட்டத்தில் கலந்துகொண்டு எனது மகள் திருமண காரியத்திற்காக சகோதரரிடம் ஜெபித் தேன். அவர்கள் ஜெபித்து தீர்க்கதரிசனமாக **"மகளுக்கு லண்டனிலிருந்து கர்த்தருக்கு பயந்த நல்ல மணமகன் வருவார், மிகுந்த ஆசீர்வாதமாக திருமண காரியம் நடைபெறும்"** எனக் கூறினார்கள். **அவர்கள் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு கூறியது போலவே எனது மகளுக்கு லண்டனிலிருந்து ஒரு மணமகன் பெண் கேட்டு வந்தார், நல்லபடியாக திருமணமும் நடந்து முடிந்தது. கர்த்தர் சொன்னபடியே மகளுடைய வாழ்க்கையை ஆசீர்வதித்தார்.** இதை எங்களால் நம்பவே முடியாத ஒரு மிகப்பெரிய அற்புதமாகும். கர்த்தர் செய்த நன்மைக்காக அவரை துதிக்கிறேன்.

**- திரு. பூசையா, மசூதிபட்டணம்**

# இருதய பெலவீனம், மூளையில் உள்ள கட்டியை குணமாக்கி இன்றுவரை ஜீவனோடு பாதுகாத்து வரும் அதிசய தேவன் இயேசு!

என் பெயர் அனனியா. என்னுடைய 11-வது வயதில் என் இருதயத்தின் மூன்று வால்வுகள் பாதிக்கப்பட்டது. அதனால் மூச்சு திணறல் ஏற்பட்டு அதிக கஷ்டப்பட்டேன். தொடர்ந்து 18 வயது வரை பல சிகிச்சைகள் மேற்கொண்டேன். இறுதியில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானேன்.

அறுவை சிகிச்சை பயத்தினால் ஒவ்வொரு நாளும் கண்ணீரில் நாட்களை கடத்தினேன். இளமை பருவத்தில் மரணபயம் என்னை வாட்டியதால் மனநிம்மதி இழந்து காணப்பட்டேன். அந்த நாட்களில் சுருக்கெழுத்து பயிற்சியை கற்றுக் கொண்டேன். அதனால் எனது சுருக்கெழுத்து ஆசிரியர் அன்பரின் ஊழியத்தில் என்னை வேலையில் சேர்த்து விட்டார்கள்.

## அன்பரின் ஊழியத்தில் சேர்ந்த அந்த நாட்கள்

- அன்பரின் ஊழிய அலுவலகத்தில் எனக்கு மிகவும் வித்தியாசமான அனுபவம் கிடைத்தது, **Dr.AnandaStira& Mrs. Margaret Stira** அவர்கள் வேதத்தின் ஆழங்களை தினந்தோறும் கூறுவார்கள்.
- அவர்களுடைய தேவ செய்திகள் புறமார்க்கத்திலிருந்து வந்த என் மனதுக்கு ஆறுதலாக இருந்தது.
- ஒவ்வொரு நாளும் நான் கேட்ட வேத வசனங்கள் என்னை அதிகமாக பெலப்படுத்தியது. இயேசுவை குறித்தும், அவர் நொறுங்குண்ட இருதயங்களை ஆறுதல்படுத்துகிறதையும் அறிந்து, **கிறிஸ்துவின் அன்பை சுவைக்க ஆரம்பித்தேன்.**
- ஊழியத்தில் சேர்ந்த சுமார் 6 மாதத்திற்குள் **என்னை இயேசுவுக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுத்தேன்.**
- வேதம் வாசிப்பது, தேவ செய்திகளை கேட்பது, ஜெபிப்பது என்பதில் அதிக உற்சாகமாய் இருந்தேன். சகோதரர் அவர்களுடன் இணைந்து மாதத்தில் 15 நாட்கள் இரவு ஒரு மணிவரை நாங்கள் ஜெபிப்போம்.
- **நாளையடைவில் இருதய நோயை குறித்த மரணபயம் என்னை விட்டு அகன்றது, எனக்குள் ஒரு திட நம்பிக்கை உருவானது. தேவ கிருபையால் மருத்துவர்களும் எனக்கு தற்போதைக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை என்று கூறிவிட்டனர்.**
- வருடங்கள் உருண்டோடினசுமார் 22 ஆண்டுகளாக மிகவும் நலமுடன் வாழ்ந்து வந்தேன்.
- 2002ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடந்தது, இரண்டு மகன்கள் பிறந்தனர், மூத்தவன் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கிறான், இளையவன் பத்தாம் வகுப்பு படிக்கிறான்.
- எனக்கு 44 வயது நடந்துக் கொண்டிருந்தப்பொழுது ஒருநாள் திடீரென காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட்டது. அதற்காக சிகிச்சைகள் எடுத்தும் குணமாகாமல் தொடர் காய்ச்சல் மற்றும் பயங்கர தலைவலியினால் கஷ்டப்பட்டேன்.
- மீண்டும் ஒரு சிறப்பு மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டேன். ஒரு கட்டத்தில் காய்ச்சல் அதிகமானது, பேச்சு குளறியது, வலிப்பு ஏற்பட்டது.
- மூளை நரம்பியல் நிபுணர் என்னை பரிசோதித்து விட்டு என்னுடைய மூளையில் இரத்த கட்டி உருவாகியுள்ளதை கண்டுபிடித்தார். பக்கவாதத்திற்கான அறிகுறி உள்ளது. நிச்சயம் எனது

இடது பக்கம் முழுவதும் செயலிழந்து விடும் என்று கூறிவிட்டார். அவர் தந்த தவறான மாத்திரையால் எனது மண்ணீரல் பாதிக்கப்பட்டு வயிற்றுவலி உண்டானது.

- ஒரு பக்கம் இருதயத்தில் ஏற்பட்ட வெஜிடேஷனுக்கான சிகிச்சை, மூளையில் உருவான இரத்த கட்டிக்கான சிகிச்சை போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் வயிறு அறுவை சிகிச்சைக்கு நாள் குறித்து விட்டார் மருத்துவர்.
- ஒரு மாதம் மருத்துவமனையிலேயே இருந்தேன். அங்கு கொடுக்கப்பட்ட அதிகமான பவர் புல் மருந்துகள் எனது சரீரத்தின் சிஸ்டத்தையே மாற்றிவிட்டது, படுக்கையிலேயே மாதக் கணக்கில் இருந்தபடியால் உடலில் புண்கள் (bed sore) ஏற்பட்டு வேதனை அடைந்தேன்.

## ஜெபத்திற்கு பின்

- **Dr.AnandaStira, Rev.Dr.A.Joshua,Dr.Jane Joshua** அனைவரும் மருத்துவமனைக்கே வந்து எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள்.
- அவர்கள் ஜெபித்து சென்றவுடன், இரவு நேரத்தில் வேதத்தை எடுத்து ஏசாயா 53ஐ என்னால் முடிந்த அளவு வாசித்து, தேவனிடம் புலம்பினேன். **"தேவனே இனியும் நான் உயிரோடு இருக்க விரும்பவில்லை, என் உயிரை தயவு செய்து எடுத்துக்கொள்ளும்"** என்று கண்ணீர் வடித்தேன். **ஒரு சில நிமிடம் தான், அந்த அறைக்குள் கர்த்தருடைய செட்டையின் நிழல் என்மேல் படுவதைப்போல் உணர்ந்தேன்.**
- அதன்பின் அயர்ந்து தூங்கினேன். காலையில் எழுந்து பார்த்த பொழுது எனக்கிருந்த படபடப்பு நீங்கியிருந்தது, என்னால் சாப்பிட முடிந்தது. வயிறுவலி இல்லை. பரிபூரண சுகம் உண்டாயிற்று.
- **விசுவாசத்தோடு, நம்பிக்கையோடு மீண்டும் அன்பரின் ஊழியத்தில் சேர்ந்தேன், அன்றிலிருந்து இன்று வரை நல்ல சுகத்துடன் இருக்கிறேன். எனது இருதயத்தில் இருந்த வெஜிடேஷன் மறைந்தது. மூளைக்கட்டி நீங்கியது.**
- இன்றும் கர்த்தருக்கு சாட்சியாக ஊழியம் செய்கின்றேன். தேவனுக்கு மகிமை உண்டாவதாக. Dr.AnandaStira **மற்றும் அவர்கள் குடும்பத்தினரின் ஜெபத்தை கேட்டு கர்த்தர் செய்த அற்புதத்திற்காக தேவனை முழு இருதயத்தோடு துதிக்கிறேன், ஸ்தோத்தரிக்கிறேன்.**

**- சகோ. அனனியா, திருச்சி.**

## ஆறு ஆண்டுகளுக்கு பிறகு குழந்தை பாக்கியம்



2019-ஆம் ஆண்டு எனக்கு திருமணமானது. சுமார் ஆறு ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் மிகுந்த வேதனையுடன் வாழ்ந்து வந்தேன். இதற்காக பலவித மருத்துவ முயற்சிகளை மேற்கொண்டும் எந்தவொரு பிரயோஜனமும் இல்லை. இந்நிலையில் நாகர்கோவிலில் நடைபெற்ற அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் கலந்துகொண்டு **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களிடம் ஜெபிக்கும்படி சொன்னேன். சகோதரர் எனக்காக ஜெபித்து **"நீ கவலைப்படாதே! கர்த்தர் உனக்கு இரண்டு குழந்தைகளை தருவார்"** என்று தீர்க்கதரிசனமாக கூறினார்கள். அந்த நம்பிக்கையின் வார்த்தைகள் எனக்கு மிகுந்த ஆறுதலை தந்தது. ஆறு ஆண்டுகள் கழித்து கர்த்தர் என் வாழ்க்கையில் அற்புதம் செய்தார். ஆண் குழந்தை பெற்றெடுக்கும்படி தேவன் கிருபை செய்தார். மாத்திரமல்ல, இரண்டு குழந்தைகளை கர்த்தர் தருவார் என்று சகோதரர் சொன்ன வார்த்தையின்படியே, சமீபத்தில் எனக்கு இன்னொரு ஆண் குழந்தை பிறந்துள்ளது. என் கண்ணீரை துடைத்த சர்வ வல்ல தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! **- திருமதி. வனஜா, நாகர்கோவில்**

# சிறையிருப்பிலிருந்து விடுதலையாக ஏறெடுக்கப்படும் உருக்கமான ஜெபம்!

# விசேஷித்த ஜெபம்!

ஜெபம் ஏறெடுப்பவர் : Dr. ஆனந்த ஸ்திரா

அன்பின் தேவனே, நீர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்! பல்வேறு விதங்களில் சிறைபட்டவர்களை விடுவிக்கும்படி நீர் உலகிற்கு வந்தீர். அதற்காக உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். (ஏசாயா 61:1-3; லூக்கா 4:12; யோவான் 8:32,36)

ஏராளமான மக்கள் பிசாசின் சிறையிருப்பில் சிக்கி தவிக்கிறார்கள். அநேக பிள்ளைகள் பள்ளிக்கும், கல்லூரிக்கும் செல்லாமல் சமூக வலைதளங்களில் மூழ்கி தங்களைத் தாங்களே கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர் காலத்தை பற்றி எந்த கவலையும் இல்லாமல் பெற்றோருக்கு தொந்தரவு கொடுக்கிறார்கள். சிறுசிறு காரியங்கள் தாங்கள் எதிர்பார்த்தபடி நடக்காவிட்டால் மிகுந்த கோபத்துடன் வீட்டிலுள்ளவர்களை எதிர்க்கிறார்கள்.

அன்பின் கர்த்தாவே! இன்று எங்கள் ஜெபத்தை கேட்டு இப்படி தங்கள் வாழ்க்கையை கெடுத்து சத்துருவால் சிறைபிடிக்கப்பட்ட இந்த வாலிப உள்ளங்களை விடுதலையாக்கும். **ஏசாயா 51:14ல் "சிறைப்பட்டுப் போனவன் திவிரமாய் விடுதலையாவான்; அவன் கிடங்கிலே சாவதுமில்லை, அவனுடைய அப்பம் குறைவுபடுவதுமில்லை"** என்று கூறினீரே. ஆம் கர்த்தாவே! நீர் சிலுவையில் சிந்தினமாசற்ற இரத்தம் அவர்கள் மீதுபடட்டும்.



வருடங்கள்தோறும் தம் பிள்ளைகளுக்காக கண்ணீர் வடிக்கிற பெற்றோர்களுக்கு செவி சாய்த்து அவர்களுடைய பிள்ளைகளை இன்றே விடுவித்தருளும். அதோடு உம்முடைய அன்பின் வல்லமை அவர்களை பரிபூரணமாய் விடுதலையாக்கட்டும். இருளின் அதிகாரத்தில் இருப்பவர்கள் பெரிய வெளிச்சத்தை கண்டது போல மனநிலை பாதிக்கப்பட்டவர்களுடைய அறையிலேயே காட்சியளியும். பாதிக்கப்பட்ட மனநிலையை மாற்றி உற்சாகமான ஆவி, நிலைவரமான ஆவி, பரிசுத்த ஆவியை அவர்களுக்கு கட்டளையிட்டு என்றென்றும் விடுதலையோடு உம்மை சேவிக்க செய்யும். இத்தகைய பிள்ளைகள் நிமித்தமாக பெற்றோர் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள்.

ஆகவே நீர் அவர்களை விடுதலையாக்கி பெற்றோரின் கண்ணீரை துடைத்தருளும். மனநிலை பாதிக்கப்பட்டு சங்கிலிகளால் கட்டப் பட்ட மனிதர்களைவிடுதலையாக்கும்.

வாழ்க்கையில் தோல்வியுற்று, எல்லா வற்றையும் தங்கள் பேராசையால், புத்தியீனத் தால் இழந்த மக்கள் மீது நீர் இரக்கம் வையும். மனநிலை பாதிக்கப்படுவது மாத்திரமல்ல, தெருக்களில் நாடோடிகளாக பிச்சைக்காரர் களைபோல அலைகிறார்கள். வீட்டில் ஒரு அறைக்குள் தங்களை பூட்டிக் கொள் கிறார்கள். சாப்பிடாமல், குளிக்காமல் முரட்டு குணம் உடையவர்களாக மாறி வருகிறார்கள். இயேசுவே **சங்கீதம் 126:1-3ல்** சிறை யிருப்பை நீக்கும்பொழுது உம் பிள்ளை களுக்கு பெரிய மகிழ்ச்சி உருவாகும் என்று சொன்னீர். **(சங்கீதம் 14:7; 53:6)** தயவு செய்து இந்த அன்பு பிள்ளைகள் இயேசு வாகிய உம்மை அறிந்து கொள்ளவும், உம்மிடத்தில் மாத்திரம் விடுதலை உண்டு என்று நினைத்து உம்மண்டே வரவும் அநுக்கிரகம் செய்யும். உம்முடைய சிலுவையின் பாடுகளுக்கு முன்னால் எவ்வித தீமையான சிறையிருப்பின் வல்லமை கிரியை செய்யாதபடி இப்படிப்பட்டவர்களை இயேசுவின் நாமத்தில் உடனே விடுதலை யாக்கும். உம்முடைய மாசற்ற இரத்தத்தை அவர்கள் தலையில் தெளித்தருளும். பாதிக்கப்பட்ட அவர்களுடைய மனம் மூளை, இதயம், தீமையான மற்றும் அசுத்தமான செயல்களை செய்கிற அவர்கள் கரங்களை, கால்களை சுத்தப்படுத்தும். மீண்டும் அவர்கள் நல்ல உணர்வோடு பிரகாசமான பிள்ளை களாக மாறட்டும். துன்பத்தை கண்ட நாட் களுக்கு சரியாக அவர்களை மகிழ்ச்சி யாக்கும். நீர் எங்கள் ஜெபத்தை கேட்டு சிறைபட்ட பிள்ளைகளை விடுதலையாக்குவீர் என்ற நம்புகிறோம்.

பெற்றோரும் இப்படிப்பட்டவர்களை



தைரியமாக நற்செய்திக் கூட்டங்களுக்கு அழைத்து வரும்படி செய்யும். அதன் மூலம் உம்முடைய ஊழியக்காரர்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தில் அவர்களை பாதித்திருக்கிற பிசாசை விரட்டுவதால் நீர் விடுதலை தருவீரே தயவாக இப்பொழுதே அவர்களை விடுதலை யாக்கும். அவர்கள் வீணடித்த வருடங்களை எல்லாம் அவர் களுக்கு சந்தோஷமும், மகிழ்ச்சியும், வெற்றியின் ஆண்டுகளாக மாற்றும். **(சங்கீதம் 90: 15,17)** அவர்கள் எழும்பி மீண்டும் பிரகாசிக்க செய்யும். மீண்டும் கல்லூரி, பள்ளிகளுக்கு போகச் செய்யும். அவர்களை கஷ்டப்படுத்துகிற கோபக்கார பிசாசை இயேசுவின் நாமத்தில் சபித்து பாதாளத்தில் தள்ளுகிறோம். இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் தாழ்மை யோடு வேண்டிக்கொள்கிறேன் பிதாவே! ஆமென்!

# சிறையிருப்பிலிருந்து விடுவிக்கும் கர்த்தர்!

இன்றைய நவீன உலகத்தில் பல வாலிப பிள்ளைகள் வேண்டாத Drugs, பான்பராக், ஹான்ஸ், Video Games மற்றும் பலவிதமான சூதாட்டங்களில் ஈடுபட்டு அதிலிருந்து வெளிவர முடியாதபடி தடுமாறுகிறார்கள். வேலையில் சிறு பிரச்சனை வந்தால் மனரீதியாக பாதிக்கப்பட்டு வேலைக்கு போகாமல் வீட்டிலேயே முடங்கி விடுகிறார்கள். பல தீய பழக்கவழக்கங்களுக்கும் அடிமையாகின்றனர். இதனால் படிப்பை தொடர முடியாமல், வேலைக்கு போக முடியாமல் பிசாசுக்கு அடிமையாக மாறி விடுகின்றனர். பெற்றோர் அறிவுரை கூறினால் அதிகமாக கோபப்படுகிறார்கள். பல வேண்டாத நண்பர்களோடு தொடர்பு கொண்டு கெட்ட காரியங்களை கற்றுக் கொள்கின்றனர். படிப்பில், வேலையில் சிறு தோல்வி வந்தால் கூட அதை துணிவுடன் எதிர்கொள்ளும் மனநிலை இல்லாமல் சோர்ந்து போகின்றார்கள்.





ஆம் எனக்கன்பான தேவ பிள்ளைகளே! மனிதருக்கு இரண் டுவழிகள் தான் உண்டு. ஒன்று அவன் தேவனோடு இருக்கவேண்டும். தேவனை விட்டு விலகும் ஒவ்வொரு நொடியும் அவன் சத்துருவாகிய சாத்தானிடம் இருக்கிறான் என்பதை மறக்கக் கூடாது. இன்று அநேக கிறிஸ்தவ வீடுகளில், கிறிஸ்தவர் அல்லாத வீடுகளில் இப்படி காலத்தை வீணாக்குகிறவர் ஏராளம் ஏராளம். எங்கள் கூட்டங்களில் விடுதலைக்காக வருகிறவர்களும் எராளம். எனவே அவர்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கின்றேன். கர்த்தர் நம் ஜெபத்தை கேட்பாராக!

Telugu Whats App No: 91770 87860

# WE ARE HIRING

📍 Trichy




- **Accountant**
  **(B.com. / M.com. Graduates)**
  *Skills Required : Tally ERP 9*
- **Data Entry Operators**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in computing skills*
- **Correspondence**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Typing & computing skills (Tamil, English, Telugu)*
- **Social Media Executive**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Good in social media platforms , Good in English & Tamil*
- **Video Editors**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Premiere Pro & After Effects*
- **Graphic Designers**
  **(Any UG/PG Candidates)**
  *Skills Required : Able to work in Adobe Photoshop & Illustrator*
- **Camera Man**
  **with adequate experience**
- **Drivers**
- **Cooks**
- **House Keepers**

- **Male / Female**
- **Christians Preferred**
- **Accommodation will be provided**
- **Apt Remuneration will be paid**

Apply to :

**info@mojindia.org**

# ஜி.யு. போப்
# George Uglow Pope
## 1820 - 1908



### பிறப்பு

கனடாவில் உள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் 1820-ம் ஆண்டு ஏப்ரல் 24-ம் தேதி ஜான் போப் பிறந்தார். தந்தை பெயர் யூக்ளோ போப். தாயின் பெயர் காத்ரீன். ஜார்ஜ் யூக்ளோ என்பது போப்பின் இயற்பெயர். வாணிபத்திற்காக எட்வர்ட் தீவிற்கு சென்றிருந்த இவருடைய பெற்றோர் 1826-ம் ஆண்டு அங்கிருந்து வெளியேறி இங்கிலாந்துக்கு குடும்பமாக திரும்பினர். போப் தனது 19-ம் வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

### தமிழ்நாட்டிற்கு வருகை

விவிலிய நூற்கழகத்தின் சார்பாக பணி புரிவதற்காக 1839-ல் தமிழ் நாட்டிற்கு வந்தார். கப்பலில் பயணம் செய்த அந்த எட்டு மாதங்களிலேயே தமிழை நன்கு கற்றார். வெஸ்லியன் சங்கம் சார்பாக சென்னைக்கு வந்த போப் சாந்தோம் பகுதியில் தங்கினார். சென்னையில் இங்கிலாந்து திருச்சபையில் சேர்ந்து குரு பட்டம் பெற்றார். எஸ்.பி.ஜி. என்னும் நற்செய்திக் கழகத்தின் தொண்டராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். வெஸ்லியன் சங்கம் சார்பாக சாயர்புரம் சிற்றூருக்கு கிறிஸ்தவ தொண்டாற்ற அனுப்பி வைக்கப்பட்டார்.

### சாயர்புரத்தில் ஜி.யு. போப் அவர்களின் பணி

தூத்துக்குடிக்கு அருகே உள்ள சாயர்புரத்தை மையமாக வைத்து போப் அவர்கள் ஊழியங்களை ஆரம்பித்தார். சாயர்புரத்தில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவினார். இவருடைய கடின உழைப்பால் 96 ஊர்களில் சபைகள் துவங்கப்பட்டது. ஞானஸ்நானத்திற்காக ஆயிரத்து நூறு மக்கள் தயாராயினர். அருகில் உள்ள கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டன.

நாட்டு மக்களுக்காக மாபெரும் நற்பணிகளைச் செய்த போதிலும் பல இன்னல்கள் அவருக்கு நேர்ந்தது. சில ஊர்களில் அவர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஒருமுறை அவர் பிரசங்கம் செய்துக் கொண்டிருந்த போது, ஒரு பெண் மாட்டு சாணத்தைக் கரைத்து அவர் மேல் ஊற்றினார். கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தாலும், மக்கள் கிறிஸ்துவின் அன்பை கண்டுக் கொள்ளவும் வேண்டுமென அனைத்தையும் பொறுமையுடன் தாங்கிக் கொண்டார்.

### தமிழ்மொழிக்காக உழைத்த மாமனிதர்

- தமிழ் மொழியில் ஏராளமான நூல்களை எழுதினார்.
- திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- புறப்பொருள், வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார்.
- பழைய ஏட்டுச் சுவடிகளை தேடிச் சேகரித்தார்.
- தமிழின் பெருமையை வளர்த்த தலை சிறந்த அறிஞர்களுள் இவரும் ஒருவர்.

### தஞ்சையில் ஆற்றிய பணிகள்

போப் தஞ்சையில் 8 ஆண்டுகள் தங்கியிருந்து சிறப்பான முறையில் கிறிஸ்தவப்

பணியைத் தொடர்ந்தார். அத்துடன் கல்விப்பணி மற்றும் தமிழ்ப் பணியிலும் ஆர்வம் கொண்டு கடினமாக உழைத்தார்.

தஞ்சையில் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட மக்கள் ஜாதி அடிப்படையில் பிரிவினையை ஏற்படுத்தினர். இந்த பிரிவினையை போப் ஏற்க மறுத்து விட்டார். தேவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்பதைத் தெரிவித்தார். இதனால் பல எதிர்ப்புகளுக்கு உள்ளாகி இவர் சார்ந்திருந்த நற்செய்திக் கழகம் மற்றும் சங்கங்களின் உதவியின்றி தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவ தொண்டாற்றி வந்தார். தஞ்சை யிலிருந்து மனைவி மற்றும் ஐந்து மக்களுடன் போதிய பொருள் வசதியின்றி மாட்டு வண்டியில் 24 நாட்கள் பயணம் செய்து உதகமண்டலம் வந்தடைந்தார்.

## உதக மண்டலம், பெங்களூரில் ஆற்றிய பணிகள்

உதகையில் ஐரோப்பிய மாணவர்களுக்கு ஆசிரியராக பணியமர்த்தப்பட்டு பாடங்களை கற்பித்து வந்தார். தொடர்ந்து உதகையில் சிறந்த பள்ளியை உருவாக்கினார். சிறைத்தண்டனை பெற்றிருந்த ஐரோப்பிய குற்றவாளிகளை சந்தித்து அவர்களுடன் உரையாடினார்.

1871-ல் பெங்களூர் சென்று சமயப்பணியும், கல்விப்பணியும் ஆற்றினார். அங்கிருந்த நாட்களில் உடல் நலம் குன்றியதால் மீண்டும் இங்கிலாந்துக்கு சென்றார். இங்கிலாந்து பல்கலைக்கழகம் ஒன்றில் 1885 முதல் 1908 வரை தமிழ் மற்றும் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணியாற்றினார்.

தன் வாழ்நாள் முழுவதும் கடினமாக உழைத்த போப் 88-ம் வயதில் பரலோக வாழ்வை நோக்கி பயணம் ஆனார். அறிவியல் முன்னேற்றங்கள் பெருகிவிட்ட இக்காலத்தில் செய்ய முடியாத மாபெரும் பணிகளைச் செய்தவர் ஜி.யு.போப்.



# WORLD NEWS உலகச் செய்திகள்



இங்கிலாந்து வரலாற்றில் மிக நீண்ட காலமாக மகாராணியாக இருந்து முடியாட்சி நடத்திய ராணி இரண்டாம் எலிசபெத் செப்டம்பர் மாதம் 8-ம் தேதி காலமானார். அவருக்கு வயது 96.

1926-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ஆம் தேதி இங்கிலாந்து அரச குடும்பத்தில் பிறந்தவர் எலிசபெத் அலெக்சேன்ட்ராமேரி. அவர் பிறந்த போது இங்கிலாந்தை அவரது தாத்தா ஐந்தாம் ஜார்ஜ் ஆண்டு கொண்டிருந்தார். அவர் 1936-ல் மரணமடைந்த போது மன்னராக மூத்த மகன் எட்டாம் எட்வர்டு அரியணை ஏறினார். ஆனால் குறுகிய காலத்திலேயே தன்னுடைய காதலுக்காக மன்னர் பதவியைத் துறந்தார். அதைத் தொடர்ந்து எலிசபெத்தின் தந்தையான ஆல்பர்ட் ஆறாம் ஜார்ஜ் என்ற பெயருடன் மன்னரானதும் 10 வயதில் பட்டத்து இளவரசி ஆனார் எலிசபெத். 1952-ஆம் ஆண்டில் தந்தை மறைந்ததும் இங்கிலாந்தின் ராணியாக முடிசூடினார் இரண்டாம் எலிசபெத்.

கணவர் பிலிப் கடந்த ஆண்டு உயிரிழந்த நிலையில் கடந்த சில நாட்களாக ராணி எலிசபெத்தின் உடல் நிலையும் மோசமானது. இந்நிலையில் செப்டம்பர் 8-ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் அவர் உயிரிழந்ததாக பக்கிங்காம் அரண்மனை அதிகாரப்பூர்வமாக தகவல் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து அரண்மனையிலும், அரசு அலுவலகங்களிலும் அந்நாட்டு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. பால்மோர், பக்கிங்காம், விண்ட்ஸர் அரண்மனைகளுக்கு வந்த மக்கள் ராணிக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

ராணி மறைந்ததுமே அவரது 73 வயது மகன் சார்லஸ் மன்னர் ஆனார். அவர் மூன்றாம் சார்லஸ் மன்னர் எனஅழைக்கப்படுவார். ராணியின் உடல் எடின்பர்கில் உள்ள அரண்மனைக்கு கொண்டு செல்லப் படும். பின்னர் லண்டன் பக்கிங்காம் அரண்மனை கொண்டு செல்லப்பட்டு 10-வது நாளில் அடக்கம் செய்யப்பட்டது.

உள்ளூர் நேரப்படி செப்டம்பர் 19-ம் தேதி காலை 11.00 மணிக்கு ராணியின் உடல் வைக்கப்பட்டிருந்த சவப்பெட்டி, வெஸ்ட்மினிஸ்டர் ஹாலில் இருந்து ஊர்வலமாக புறப்பட்டது. அப்போது பிரிட்டன் மக்கள் இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்தி ராணிக்கு தங்கள் இறுதி மரியாதையை செலுத்தினர். காட் சேவ் திகிங் என்ற பிரிட்டனின் தேசியகீதம் ஒலித்தது. ராணியின் உடல் மீது அரச குடும்பத்து கொடி போர்த்தப்பட்டு, அவரது அரண்மனையில் இருந்து பறிக்கப்பட்ட மலர்களால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. சவப்பட்டி மீது கோஹினூர் வைரம் பொறிக்கப்பட்ட ராணியின் கிரீடம் மற்றும் அவரது பதவி ஏற்பின் போது அளிக்கப்பட்ட செங்கோல் ஆகியவை வைக்கப்பட்டு இருந்தன.

இறுதி ஊர் வலகத்தில் மன்னர் மூன்றாம் சார்லஸ் அவரது மகன்கள் இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹாரி ஆகியோர் ராணியின் உடலை பின் தொடர்ந்து சென்றனர். இளவரசர் வில்லியம்சின் மகன்கள் இளவரசர் ஜார்ஜ், இளவரசர் சார்லஸ் ஆகியோரும் ஊர்வலத்தில் பங்கேற்றனர். 6,000 இராணுவ வீரர்கள் புடைசூழ ராணியின் உடல் அடங்கிய சவப்பெட்டி ஆயுதங்கள் தாங்கி செல்லும் வாகனத்தில் லண்டன் வீதிகளில் ஊர்வலமாக சென்றது. லண்டனின் பிரதான அடையாளமாக திகழும் எலிசபெத் டவரில் உள்ள திபின் பென் என்ற பிரமாண்ட மணி ராணியின் ஆயுளை குறிப்பிடும் விதமாக நிமிடத்துக்கு 96 முறை ஒலித்தது. ராணியின் உடல் 11-ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் அபேவுக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு அரச குடும்பத்தினர், சர்வதேச தலைவர்கள், பொது மக்கள் முன்னிலையில் முழு அரசு மரியாதை யுடன் இறுதிசடங்குகள் நடந்தன. இந்த நிகழ்வில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உள்ளிட்ட 2,000த்திற்கும் மேற்பட்ட சர்வதேச தலைவர்கள் பங்கேற்றனர்.

வெஸ்ட்மினிஸ்டர் அபேவில் இருந்து புறப்பட்ட ராணியின் உடல் அருகில் உள்ள விண்ட்ஸர் அரண் மனையின் செயின்ட் ஜார்ஜ் தேவாலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டது. அங்கு ராணியின் கணவர் இளவரசர் பிலிப் மற்றும் பெற்றோர் கல்லறைகளுக்கு அருகே ராணியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் அரச குடும்பத்தினர் தவிர வேறு நபர்கள் அனுமதிக்கப்படவில்லை.



# S J SAVES TRUST
## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- *கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகிறார்.*
- *எல்லா ஜீவன்களின் கண்களும், உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது, ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.*
- *நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.*

*(சங்கீதம் 145:14-16)*

ஒப்பற்ற மகத்துவமுள்ள ஒரே ஒரு மெய் தெய்வமாகிய கர்த்தர் மிகுந்த இரக்கமும், தயையும் கிருபையும், மனதுருக்கமும் உள்ளவர். நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். அவர் ஏழைகளை ஆதரிக்கிறவர், வீடு வாசலின்றி தவிக்கிறவர்களுக்கு வீடு வாசல் ஏற்படுத்துகிறவர். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட அனைவருக்கும் இரங்கி நன்மை செய்கிறவர். தேவன் தம்மை அறிந்தவர்களுக்கு நன்மை செய்வதை போல அறியாதவர்களுக்கும் நன்மை செய்து பாதுகாக்கிறவர்.

உதாரணமாக, ஆகாருடைய வாழ்க்கையை பாருங்கள். ஆகாருக்கும் தேவனுக்கும் சம்பந்தமே இல்லை. ஆகார் தன் மகனுடன் (12 வயது மகன்) வனாந்தரத்தில் அலைந்து திரிந்து தண்ணீரின்றி தாகத்தால் செத்துக் கொண்டிருக்கும்பொழுது கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி வனாந்தரத்தில் தண்ணீர் ஊற்றுகளை புறப்படச் செய்து அவர்கள் தாகத்தை தீர்த்தார். ஒருவரும் இல்லாத அந்த வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்தார்.

கர்த்தர் இயேசு தம்முடைய சத்துருக்களையும் நேசிக்கிறார். அவர்களை பழிக்கு பழி வாங்காமல் தமது மிகுந்த மனதுருக்கத்தால் அவர்களை மன்னித்து ஆதரிக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் அவ்வாறே செய்கிறோம்.

## விதவைப் பெண்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள்

நாம் உதவி செய்து வருகின்ற சேலம் மற்றும் நாமக்கல் சுற்றியுள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான விதவைகள் இருக்கிறார்கள். இதில் பெரும்பாலான பெண்கள் 30 வயதிலேயே கணவரை இழந்து விதவைகளாக மாறி உள்ளார்கள். அநேகர் பலவிதங்களில் பாதிக்கப்பட்டு, வேலைக்கு போகமுடியாதபடி சிறு வயதிலேயே மிகுந்த வயோதிபர்களை போல மாறிவிடுகிறார்கள். அவர்கள் சரீரத்தில் உள்ள பெலவீனம் மற்றும் நரம்பு தளர்ச்சியினால் நூறு நாள் வேலைக்கு கூட போக முடியவில்லை. இவர்கள் வாழ்வாதாரத்திற்காக நாம் ஆடுகள் வழங்கினோம். அத்துடன் உணவு, மருந்துகள், புடவைகள் கொடுத்து நமது S.J. அறக்கட்டளை மூலம் ஆதரிக்கிறோம். இதுவரைக்கும் ஆயிரக்கணக்கான விதவைகள் பயன் அடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களில் வசிக்கும் 100 விதவை பெண்களுக்கு எண்ணெய், சோப், மருந்துகள், நல்ல உணவு, சத்து டானிக்கும் கொடுக்கப்பட்டது. அங்குள்ள ஊர் தலைவர்கள் நம்மை வெகுவாக பாராட்டினார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள்

சேலத்தில் தீராத கொடிய மரண வியாதியை அனுபவிக்கும் 50 பேருக்கு செப்டம்பர் 21-ஆம் தேதி சில உதவிகள் செய்தோம். **குறிப்பாக நல்ல உணவு, மருந்து வகைகள், அவர்களுடைய CD count ஏறத்தக்கதாக நவதானியங்கள், பருப்பு வகைகள், புரோட்டின் பவுடர் மற்றும் எண்ணெய், சோப், இன்னும் ஏராளமான பொருள்கள் கொடுக்கப்பட்டன.** அவர்களுக்கு இருக்கிற தீராத வியாதியின் நிமித்தம் ஊரில் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இதில் எந்த தவறும் செய்யாமல் கணவரால் பாதிக்கப்பட்டோர் ஏராளம் ஏராளம். எனவே கர்த்தருடைய கட்டளையின்படி நாம் இந்த நல்ல காரியங்களை செய்கின்றோம்.

## ஏழைப்பிள்ளைகளுக்கு மாலைநேர வகுப்பு - இரவு உணவு

நமது ட்யுஷன் சென்டரில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நல்ல ஆசிரியர்களை வைத்து பாடங்களை கற்றுக் கொடுக்கிறோம். அத்துடன் அவர்களுக்கு தினந்தோறும் இரவு உணவு வழங்கி வருகிறோம்.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கும், **SJ Saves Trust** ட்யூசன் சென்டரில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கும் உதவி செய்கிற உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியை தெரிவிக்கிறோம். தொடர்ந்து நற்கிரியைகளை செய்வோம். ஏற்ற காலத்தில் பலனை அறுப்போம்.

- ✦ **அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார், கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக்குகிறார்.**
- ✦ **குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார், மடங்கடிக்கப்பட்டவர்களைக் கர்த்தர் தூக்கி விடுகிறார், நீதிமான்களைக் கர்த்தர் சிநேகிக்கிறார்.**
- ✦ **பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார், அவர் திக்கற்ற பிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார் - சங்கீதம் 146 : 7-9**


**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

**சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் வசிக்கும் கைம்பெண்களுக்கு உதவிகள் வழங்கினோம். அதில் ஒரு பகுதியினர்**











# S.J.S.T கிராமப்புற மருத்துவமனை பணிகள்

ஐந்து வருடத்திற்கு முன் சிறியதாக கிராமத்து மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட **S J S T Rural Medical Clinic** இப்பொழுது கர்த்தருடைய கிருபையினாலும், உங்களது ஜெபத்தினாலும் வளர்ந்து வருகிறது.

நம் மருத்துவமனையில் நல்ல சிகிச்சையும், அன்பு நிறைந்த சேவையும் காணப்படுகிறது என ஏராளமானவர்கள் சாட்சி கூறுகின்றனர். நீங்கள் அனைவரும் நம் மருத்துவமனை வளர்ச்சிக்காக ஜெபிப்பதற்காக நன்றி கூறுகிறோம்.

உங்கள் ஜெபத்தை கர்த்தர் கேட்டு இரண்டு இளம் கிறிஸ்தவ மருத்துவர்களை கொடுத்துள்ளார். அதோடு நல்ல திறமை வாய்ந்த தலைமை மருத்துவர் அவர்களும் நமது மருத்துவமனையில் பணிபுரிகின்றார். இதன் மூலம் இங்கு வருகிற நோயாளிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது.

இன்னும் மருத்துவமனைக்கு தேவையான **Children Specialist, M.D.DCH, Nurses (GNM** முடித்தவர்), **B.Sc., Radiologist & Scan Technician** கிடைக்கும்படி ஜெபியுங்கள். தேவ கிருபையால் **ULTRA sound scan** வாங்கிவிட்டோம். அத்துடன் **Modern Lab**க்கு இன்னொரு **Instrument**-ம் வாங்கிவிட்டோம். **(ELECTROLYTE MACHINE)**-ம் வாங்கி உள்ளோம். ஐந்து படுக்கை வசதியுடன் ஆரம்பிக்கப்பட்ட மருத்துவமனை இன்று நோயாளிகளின் எண்ணிக்கை பெருகுவதால் தற்பொழுது 15 படுக்கை வசதி கொண்டதாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.

மிக விரைவில் சிறு குழந்தைகளுக்கு தனி வார்டும், **Modern Theatre**-ம் அவசரமாக தேவைப் படுகிறது. இது மூன்று மாடி கட்டிடமாக அமையும். இல்லாதவைகளை இருக்கிறவைகளை போல அழைக்கும் தேவன் இந்த விஷயத்தில் தமது சுத்த கிருபையை காண்பித்து சீக்கிரமாக நிறைவேற்றும் படியாக ஜெபியுங்கள். உங்கள் தாராளமான உதவிகளை **SJ** வங்கிக் கணக்கிற்கு அனுப்புங்கள். நல்ல சமாரியனை போல எவ்விதமான வசதியுமின்றி கஷ்டப்படுகிற மரணத்தின் விளிம்பில் இருக்கிறவர் களை காப்பாற்றுவோம். அனைத்து வியாதியஸ்தர் களுக்கும் நம் அன்பை காட்டுவோம்.

- **மரணத்துக்கு ஒப்பிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி.**
- **அதை அறியோம் என்பாயாகில், இருதயங் களைச் சோதிக்கிறவர் அறியாரோ? உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ? அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக் குத்தக்கதாகப் பலனளியாரோ? நீதி. 24: 11,12**

நம்மை சாராத பிற நோயாளிகளுக்காக நாம் ஜெபிப்போம், கொடுப்போம். அப்பொழுது கர்த்தர் நம் நோய்களை தீர்ப்பார். பலமுறை நானும் மரண விளிம்பிற்கு சென்று இருக்கிறேன். எனினும் ஒவ்வொரு முறையும் **சங்கீதம் 41:1,2,8,3; மத்தேயு 25:33-40; லூக்கா 10:29-37** வசனங்களை கர்த்தர் எனக்கு நினைவுபடுத்துவார்.

ஆம்! பிரியமானவர்களே; உடனிருப்பவர்கள் கஷ்டப்படும் பொழுது நாம் உதவி செய்வோம். கர்த்தர் நம்மை நிச்சயமாக ஆதரிப்பார்.











செகந்திராபாத்தில் **அற்புத குடும்ப ஆசீர்வாதக்கூட்டம்**





**அக்டோபர் 15 சனிக் கிழமை**

**நேரம்**
மாலை 4.00 மணி முதல்
இரவு 9.00 மணி வரை

**இடம் : YMCA ஹால்,**
**SP ரோடு, யசோதா மருத்துவமனை எதிரில்,**
**மணிக்கூண்டு அருகில், செகந்திராபாத்**

தேவ செய்தி

**Dr. ஆனந்த ஸ்திரா**
**Dr. ஜேன் ஜாஷ்வா**

கட்டுகளிலிருந்து விடுதலை பெற
சாபங்கள் நீங்க! வியாதியிலிருந்து சுகம் பெற!

வாருங்கள்! அற்புதத்தை பெற்றுச் செல்லுங்கள்!

தொடர்புக்கு
0431 - 2741925, 91770 87860 & 99445 36343